Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 18 வள்ளுவர் ஆண்டு 2034 ஆவணி 12 வெள்ளிக்கிழமை (29-08-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:274

### வடக்கு-கிழக்கு இணைப்பைத் துண்டிப்பதா?

# தீர்வுக்கான அத்திவாரத்தினையே தகர்க்க முனைகிறார் ஜனாதிபதி!

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குற்றச்சாட்டு

கொழும்பு,ஓகஸ்ட்29

**வடக்கு - கிழக்கு இணைப்பைத் துண்டித்து இரண்டையும் மீண்டும் தனித் தனி மாகாணங்களாக்க வேண்டும் என்கிறார் ஜனாதிபதி சந்திரிகா குமார துங்க. இது பேச்சு மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான அத்தி வாரத்தைத் தகர்க்கும் செயல் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடும் எதிர்ப்பும், பலத்த கண்டனமும் தெரிவித்துள்ளது.**

விடுதலைப் புலிகளின் குரங்குபாஞ் சான் முகாம் பற்றியும் முஸ்லிம்களின பிரச்சினைகள் பற்றியும் கூட்டமைப்பு தனது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத் தியிருக்கிறது.

இவை சம்பந்தமாகக் கூட்டமைப்பு நேற்று ஊடகங்களுக்கு அறிக்கை ஒன்றை வெளியிட்டது. அறிக்கை பற்றி விளக்கம் அளிப்பதற்கு கொழும்பு நிப்பன் ஹோட்டலில் மாநாடு ஒன் றையும் நடத்தியது.

மாநாட்டில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம்

(12ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான முயற்சிக்கு சில யோசனைகள்

### 'பெப்பரல்' அமைப்பு பல தரப்பினருடன் ஆராய்வு

கொழும்பு,ஓக.29

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக் கும் நோர்வே சமாதான அனுசரணை யாளருக்கும் சில யோசனைகளைக் கையளிக்க நடவடிக்கை எடுத்து வரு வதாக 'பெப்பரல்' அமைப்பின் நிர் வாக இயக்குநரான கிங்ஸ்லி றொட் றிகோ தெரிவித்திருக்கிறார்.

சமாதான முயற்சிகளைமுன்னெ டுத்துச் செல்லும் குறிக்கோளுடன் சிவில் சமூகம் இந்த யோசனைக ளைத் தயாரித்து வருகிறது எனவும் அவர் கூறியிருக்கிறார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## மக்கள் வாழ்ந்த பகுதிகளிலேயே கண்ணிவெடி அகற்ற முன்னுரிமை

### பிரதமரின் செயலாளர் பிரட்மன் கூறுகிறார்

கொழும்பு,ஓக.29

யாழ் குடாநாட்டில் மக்கள் செறிந்து வாழ்ந்த பகுதிகளிலுள்ள கண்ணிவெடி களை அகற்றுவதற்கே முன்னுரிமை யளிக்கப்படும். 15 லட்சம் கண்ணி வெடிகளும், ஷெல்களும் அப்பகுதி களில் புதைந்து கிடப்பதாகக் கணக கிடப்பட்டுள்ளது. 2006 ஆம் ஆண்டில் கண்ணிவெடிகளை அகற்றும் இப் பணிகள் முடிவடையுமென எதிர்பார்க் கப்படுகிறது.

ஐ.நா.அபிவிருத்தித் திட்டத்துக் கான இலங்கைப் பிரதிநிதி மிகுவெல் பர்மியோ, நிதி அமைச்சின் செயலா ளர் சரித்த ரத்வத்தை, பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன் ஆகி யோர் கண்ணிவெடி அகற்றும் ஒப்பந் தத்தில் நேற்று கைச்சாத்திட்டனர். இதற்கான வைபவம் பிரதமரின் அலு வலகத்தில் இடம்பெற்றது. அதன் பின் உரையாற்றுகையிலேயே பிரட் மன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிரட்மன் வீரக்கோன் அங்கு தொடர்ந்து கூறியதாவது:-

(12ஆம் பக்கம் பார்க்க)

### புலிகள் பிரதிநிதிகள் நாளையே சுவிஸ் செல்வர்

பரீஸ்,ஓக.29

விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல் வன் குழுவினர் நாளையே பாரீஸிலி ருந்து சுவிட்ஸர்லாந்துக்கு புறப்படு கின்றனர். சுவிட்ஸர்லாந்தில் பல நிகழ்ச சிகளில் கலந்துகொள்ளும் இக்குழு

(12ஆம் பக்கம் பார்க்க)

## வடபகுதிக்கு அப்பகுதி எம்.பிக்களும் செல்ல முடியாதநிலை ஏற்பட்டுவிடுமோ?

### விநாயகமூர்த்தி எம்.பி. பிரதமருக்குக் கடிதம்

வடக்கிலுள்ள தமது வீடுகளில் சென்று மீளக்குடியமர அப்பகுதி மக்களே அனுமதிக்கப்படாத நிலை யில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளும் கூட அங்கு செல்ல முடியாதநிலை என்றோ ஒரு நாள் ஏற்படலாம் என்று நான் அஞ்சுகிறேன்.

- இவ்வாறு யாழ் மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எழுதிய கடிதமொன்றில் குறிப்பிட்டுள் ளார்.

அவர் தனது கடிதத்தில் தெரி வித்திருப்பதாவது:-

போர்நிறுத்த ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டதன் பின்னர், உயர் பாதுகாப்பு வலயம் அர்த்தமற்றதொன் றாகிவிட்டது. 2000 ஆம் ஆண்டு ஜூலை மாதம் அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டபின்னர் அது வலுவிழந்து விட்டது.

யாழ்ப்பாணத்தின் 35 சதவீத பரப்பை இராணுவம் இன்னமும் ஆக் கிரமித்துக் கொண்டுள்ளது. வடக்

(12ஆம் பக்கம் பார்க்க)

## மடு ஆலய வீதியை பொதுமக்களுக்கு திறந்துவிடுமாறு புலிகள் கோரிக்கை

### செஞ்சிலுவை சர்வதேசக் குழுவிடம் நேரில் விடுத்தனர்

மடுமாதா திருப்பதிக்குச் செல்லும் முருங்கன் - மடு வீதியை அதனை அண்டிய கிராம மக்களும் பயன்படுத்தும் விதத்தில் திறந்து விடுவதற்கு இராணுவத்துடன் பேசி நடவடிக்கை எடுக்குமாறு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடம் விடுதலைப் புலிகள் கோரியுள்ளனர்.

- மடுத் திருப்பதிக்குச் செல்லும் யாத்திரிகர்கள் (12ஆம் பக்கம் பார்க்க)

# பாகிஸ்தான் தீவிரவாதிகளை ஒடுக்க இந்தியா புலிகளைப் பயன்படுத்தலாம்!

### சிவசேனா தலைவர் பால்தாக்கரே பரபரப்புப் பேட்டி

மும்பாய்,ஓக.29

பாகிஸ்தான் தீவிரவாதிகளை ஒடுக்க இந்தியா விடுதலைப் புலிகளைப் பயன்படுத்தலாம் என்று சிவசேனாத் தலைவர் பால்தாக்கரே கூறுகிறார். இதற்காக விடுதலைப் புலிகள் மீதுள்ள தடையை இந்திய மத்திய அரசு நீக்கவேண்டும் என்று அவர் கோரியிருக்கிறார்.

மும்பாய் பந்தரா என்னுமிடத்திலுள்ள தனது இல்லத்தில் நிருபர்களுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் பரபரப்பான இந்தக் கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்.

"சமீபத்தில் நான் துணைப்பிரதமர் அத்வானியைச் சந்தித்துப் பேசிய போது கூட விடுதலைப் புலிகளின் உதவியை இந்தியா நாடவேண்டும் என்று தெரிவித்திருந்தேன். தீவிரவாதத்தை எதிர்த்துப் போராடும் அளவுக்கு விடுதலைப் புலிகளிடம் போதிய பயிற்சிகளும் மனித ஆற்றல் களும் உள்ளன" எனவும் அப்பேட்டியில் அவர் கூறினார்.

பேட்டியில் அவர் மேலும் கூறியதாவது:-

பாகிஸ்தான் இன்னமும் எல்லை தாண்டும் தீவிரவாதத்தைக் கைவிட வில்லை. பாகிஸ்தானுக்கு நாம் தக்க பதிலடி கொடுக்க வேண்டுமானால், நாமும் தீவிரவாதிகளுக்குப் பயிற்சி அளித்து அவர்களை பாகிஸ்தானுக்குள் அனுப்பவேண்டும்.

பாகிஸ்தான் ஐ.எஸ்.ஐ. சதி வேலைகளை முறியடிப்பது அவசியமான ஒன்றாகும். இதை இந்தியா உடனே செய்யவேண்டும்.

டெல்லி - லாகூர் பஸ் போக்குவ ரத்தை உடனே நிறுத்தவேண்டும். அதில் யார்- யார் வருகிறார்கள் என்று யார் கண்டது?

பயணிகள் போர்வையில் பாகிஸ் தான் தீவிரவாதிகள் அந்த பஸ் மூலம் இந்தியாவுக்குள் நுழைய அதிக வாய்ப் பிருக்கிறது.

தீவிரவாத விஷயத்திலும் பாகிஸ் தான் நயவஞ்சகத்துடன் நடந்துகொள் வதால் நாம் ஏமாந்து விடக்கூடாது. குண டுக்கு குண்டு என்ற அதிரடியான பதிலடி கொள்கையைநாம் கடைப்பிடிக்க வேண் டும். - இவ்வாறு அவர் கூறினார்.

பால்தாக்கரே



NSB

அவசரமாக காசு தேவைப்படுகின்றதா?

இப்போது தேசிய சேமிப்பு வங்கியின் ரன் சஹன அடகுச்சேவை



- ஒரு தங்க சவரனுக்கு கூடுதலான பணம்
- இரகசியம் பேணல் மற்றும் துரித சேவை
- தவணை அடிப்படையில் திரும்ப செலுத்தும் வசதி
- வருடாந்தம் 17% குறைந்த வட்டி
- கணனி மூலம் பரிசோதனை

NSB

தேசிய சேமிப்பு வங்கியின் தங்கமான சலுகை

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின்

# பழைய மாணவர் சங்கக் கூட்டத்தை அதிபர் கூட்டுவதற்கு தடை உத்தரவு

## யாழ். மாவட்ட நீதிமன்றம் நேற்று விடுத்தது

யாழ்ப்பாணம்,ஓக.29

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் பொதுக் கூட்டம் ஒன்றை தன்னிச்சைப்படி கூட்டுவதற்கு கல்லூரி அதிபர் அ.சிறிக் குமாரன் எடுத்த முயற்சிக்கு யாழ். மாவட்ட நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்து உத்தரவு பிறப்பித் திருக்கின்றது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் செய லாளர் ந.வித்தியாதரன் தாக்கல் செய்த மனு ஒன்றின் மீதே இந்த இடைக் காலத் தடையை நேற்று நீதிமன்றம் விதித்தது.

சங்கத்தின் பொதுக் கூட்டம் ஒன்றை எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை கூட்டுவதற்கான அறிவித்தலை கல் லூரி அதிபர் பத்திரிகைகள் மூலம் விடுத்திருந்தார்.

அதை ஆட்சேபித்து சங்கச் செய லாளர் தாக்கல் செய்த மனுவில் - சங்கத்தின் கூட்டத்தை கூட்டுவதற் கான அழைப்பை செயலாளரே விடுக் கலாம். அதற்கு முரணாக தன்னிச் சைப்படி அதிபர் கூட்டத்தைக் கூட்டு வதைத் தடைசெய்யும் படியும் -

எதிர்வரும் 21.09.2003 அன்று சங் கத்தின் வருடாந்தப் பொதுக் கூட் டத்தைக் கூட்டுவதற்கு தாம் எடுத் துள்ள நடவடிக்கைகளுக்கு அதிபர் இடையூறோ, இடையீடோ செய்யக் கூடாது என உத்தரவிடும்படியும் - கோரியிருந்தார்.

இந்த வழக்கு யாழ். மாவட்ட நீதி பதி இ.த.விக்னராஜா முன்னிலையில் நேற்றுப் பிற்பகல் எடுத்துக்கொள்ளப் பட்டது. வழக்காளி சார்பில் எஸ்.ஜெய சிங்கத்தின் அனுசரணையோடு சட்டத் தரணி எஸ்.ஏ.இ.ஏகநாதன் ஆஜரானார்.

அச்சமயம் சட்டத்தரணி வி.ரி.சிவ லிங்கம் வழக்கின் எதிராளியான கல் லூரி அதிபரின் சார்பில் தாம் ஆஜரா கின்றார் எனக் குறிப்பிட்டு அதிபரின் பதிலிப் பத்திரத்தைச் சமர்ப்பித்தார்.

இருதரப்பு வாதங்களையும் செவி மடுத்த நீதிபதி, பழைய மாணவர் சங் கக் கூட்டத்தை அதிபர் கூட்டுவதற்கு இரண்டு வார காலத்துக்குத் தடை விதித்து உத்தரவு பிறப்பித்ததுடன் வழக்கை எதிர்வரும் 11 ஆம் திக திக்கு ஒத்திவைத்தார்.

வழக்காளியின் அமைப்பு 'யாழ்ப் பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்' என்றும், அதிபர் பொதுக் கூட்டம் கூட்டுவதற்கு அழைத் துள்ள அமைப்பு 'யாழ். இந்துக் கல் லூரி பழைய மாணவர் சங்கம் - யாழ்ப் பாணம்' என்றும், அவையிரண்டும் வெவ்வேறு அமைப்புக்கள் என்றும் அதிபரின் சார்பில் முன்வைக்கப்பட்ட வாதத்தை நீதிமன்றம் ஏற்றுக்கொள்ள வில்லை.

பழைய மாணவர் சங்கத்தின் கூட் டத்தை சங்கச் செயலாளர் மூலம் கூட்டுமாறு மத்திய கல்வி அமைச்சு, கல்லூரி அதிபருக்கு அனுப்பி வைத்த கடிதமும் நேற்றைய விசாரணையில் வழக்காளி சார்பில் முக்கிய ஆவண மாக முன்வைக்கப்பட்டது.

மட்டக்களப்பு நகரில்

# கண்காணிப்புக் குழுத்தலைவர் தமிழ்க் கட்சியினருடன் பேச்சு!

போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு வின் தலைவர் ட்ரீக்வே ரெலிவ்சன் நேற்று முற்பகல் மட்டக்களப்பில் படை அதிகாரிகளையும் சில தமிழ்க் கட்சி களின் பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

மட்டக்களப்பின் நிலைமை, அரசி யல் கட்சிகளின் உறுப்பினர்கள் கொலை செய்யப்படுதல், கட்சி உறுப் பினர்களின் பாதுகாப்பு ஆகியவை குறித்து அவர் இச்சந்திப்புகளில் ஆராய்ந்தார் எனத் தெரியவருகிறது.

படையதிகாரிகளுடனான சந்திப்பு, இராணுவத்தின் 23ஆவது படைப்பிரி வுத் தலைமையகத்தில் நடைபெற்றது. 23ஆவது படைப்பிரிவின் தளபதி பிரி கேடியர் பாலசூரிய, 233 ஆவது படை யணியின் கட்டளையிடும் அதிகாரி ஜி. ஆர்.பி.சில்வா உட்பட முப்படைகளின் சிரேஷ்ட அதிகாரிகளும் பொலீஸ் அதி காரிகளும் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

தமிழ்க்கட்சிகளுடனான சந்திப்பு போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு வின் மட்டக்களப்பு அலுவலகத்தில் நடைபெற்றது. ஈ.பி.டி.பி, புளொட், ஈ.பி. ஆர்.எல்.எவ் (வரதர் அணி) ஆகியவற் றின் பிரதேசத் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

மாற்றுக் குழுவினர் படுகொலை செய்யப்படுவது, சொத்துக்கள் பறி முதல் செய்யப்படுவது, ஆள்கள் கடத் தப்படுவது ஆகியவை நிறுத்தப்பட வேண்டும் எனவும் மாற்றுக் கருத்துக் களையுடைய அரசியல் கட்சிகள், அர சியலில் ஈடுபட அனுமதிக்கப்பட வேண்டுமெனவும் அவர்கள் கண் காணிப்புக்குழுத் தலைவரிடம் வேண்டு கோள் விடுத்தனர்.

அரசாங்கத்துடனும் விடுதலைப் புலிகளுடனும் பேச்சு நடத்தி இதற்கு முடிவைத் தெரிவிப்பேன் - என்று ரெலிவ் சன் தெரிவித்தார். மேலும் புலிகளின் மட்டு. அம்பாறை விசேட தளபதி கேணல் கருணா பாரிஸிலிருந்து திரும் பியதும் அவருடனும் கலந்துரையாடு வதாகவும் ரெலிவ்சன் தெரிவித்தார்.

### மைதானம் இடம்மாற்றம்

யாழ்ப்பாணம்,ஓக.29

யாழ். மாவட்ட பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தின் ஏற்பாட்டி லான வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி நாளை சனிக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்திலேயே இடம்பெறவுள்ளன என அறிவிக்கப் பட்டுள்ளது.

இச்சுற்றுப்போட்டி யாழ்.மகளிர் கல்லூரியில் இடம்பெறும் என அறிவிக் கப்பட்டிருந்தது. தவிர்க்க முடியாத காரணங்களால் மைதானம் மாற்றப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

# மக்களுக்கான திட்டங்கள் பற்றி திறைசேரி கேட்பது வழமையானது

## அரச அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.29

அமைச்சுக்களால் மேற்கொள்ளப் படும் திட்டங்களால் மக்களுக்கு கிடைக்கும் நன்மைகள் தொடர்பாக திறைசேரி, அரச அதிபர்களிடம் கேட் பது வழமையான விடயம்தான் என்று யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் தெரிவித்தார்.

இந்து கலாசார அமைச்சுக்கு ஒதுக் கப்பட்ட ஒரு கோடி 50 லட்சம் ரூபா வில் செய்யப்பட்ட திட்டங்கள் தொடர் பாக அரச அதிபரிடம் திறைசேரி விவ ரம் கோரியுள்ளமை தொடர்பாக கருத் துத் தெரிவிக்கையிலேயே அரச அதி பர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சாதாரணமாக அமைச்சுக்களால் மேற்கொள்ளப்படும் திட்டங்களால் மக் களுக்கு கிடைக்கும் நன்மைகள் குறித்து அரச அதிபரிடம் கேட்பது வழமை. அந்த வகையில் இந்து கலா சார அமைச்சின் திட்டம் தொடர்பா கக் கேட்கப்பட்டது.

இந்த விடயத்தில் எந்த உள்நோக் கமும் இல்லை. எந்த அமைச்சுக்கு எதிராகவும் இது செய்யப்பட்ட விடய மும் இல்லை - என்றார் அரச அதி பர். (ம-3)

# வேலைநிறுத்தங்களைத் தடுக்கும் வழிவகை பற்றி அரசு ஆராய்வு

கொழும்பு,ஓக.29

நாடு முழுவதிலும் பெரும் வேலை நிறுத்தப் போராட்டங்களை மேற்கொள் ளும் ஒரு திட்டம் பற்றிய தகவல் கள் அரசுக்குக் கிடைத்திருக்கின்றன. இதனால் முன்கூட்டியே அப்போராட்டங் களைத் தடுக்கும் ஒரு நடவடிக்கை யாக ஊழியர் பிரச்சினைகள் குறித்து சகல தொழிற்சங்கங்களுடனும் பேச்சு நடத்த அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இதற்கென விசேட குழு ஒன்றை அடுத்த வாரத்தில் நியமிப்பதென பூர்வாங்க அமைச்சரவைக் கூட்டத்தில தீர்மானிக்கப்பட்டது.

இக்கூட்டம் பிரதமர் ரணில் விக் கிரமசிங்க தலைமையில் அலரிமாளி கையில் நேற்றுமுன்தினம் நடைபெற் றது.

இதற்கிடையே சுகாதாரச் சேவை யில் மேற்கொள்ளப்படவிருக்கும் வேலைநிறுத்தத்தைத் தவிர்க்கும் ஒரு நடவடிக்கையாக அச்சேவையைச் சேர்ந்த தொழிற்சங்கங்களுடன் பேச்சு நடத்த ஆறு உறுப்பினர் குழு ஒன்று உடனடியாக நியமிக்கப்பட்டது. இக் குழுவின் தலைவராக அமைச்சர் கரு ஜயசூரிய நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இந்த வேலைநிறுத்தப் போராட் டங்களின் பின்னணியில் ஜே.வி.பி. இருப்பதாகவும், இப்போராட்டங்கள் மூலம் நாட்டின் பொருளாதாரத்தைச் சீர்குலைக்க அக்கட்சி முயல்வதாக வும் அமைச்சர்கள் பலர் இக்கூட்டத் தில் சுட்டிக்காட்டியுள்ளனர். (ம)

# சுதந்திரக் கட்சி~ஜே.வி.பி. கூட்டணி குறித்த பேச்சை செப்ரெம்பருக்குள் முடிக்க இணக்கம்

கொழும்பு,ஓக.29

சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பிக் கும் இடையிலான தேசிய முன்னணி அமைக்கும் பேச்சுக்களில் இன்ன மும் இறுதி இணக்கம் ஏற்படவில்லை. நேற்றுமுன்தினம் நடைபெற்ற பேச்சு களும் முடிவு இன்றியே முடிவடைந் துள்ளன.

எவ்வாறாயினும் முன்னணி பற்றிய பேச்சுக்களை எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்துக்குள் முடித்துக் கொள்வதென இருதரப்புத் தலைவர்களும் நேற்று முன்தினம் தீர்மானித்திருக்கின்றனர்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் ஜனாதிபதி மாளிகை யில் இப்பேச்சுக்கள் நடைபெற்றன.

முன்னணி அமைக்கும் பேச்சுக்கள குறிப்பிட்ட ஒரு காலவரையறைக்குள் முடித்துக் கொள்ளப்பட வேண்டும் என்று ஜே.வி.பியின் பிரதம செயலா ளர் ரில்வின் சில்வா அங்கு ஜனாதி பதியிடம் வலியுறுத்திக் கூறியிருக்கி றார்.

முன்னணி தொடர்பாக இரு தரப் பினருக்கும் இதுவரை இணக்கம் காண முடியாதிருக்கும் விடயங்கள் தொடர் பாக முன்வைக்கப்பட்ட மாற்று விடயங் கள் குறித்தும் அங்கு விரிவாக ஆரா யப்பட்டது.

இந்த யோசனைகள் குறித்து எதிர் வரும் செப்ரெம்பர் முதல்வாரத்தில் மீண்டும் கூடி ஆராய இருதரப்பினரும் இணங்கினர் எனத் தெரிகிறது.

# அமைச்சர் ஜயலத் நேற்று யாழ். குடாநாட்டுக்கு விஜயம்

## விடுதலைப் புலிகளையும் சந்தித்துப் பேசினார்

புனர்வாழ்வு, மீள்குடியமர்த்துகை அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன நேற்று யாழ். குடாநாட்டுக்கு திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டார். விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பிரமுகர்களையும் அவர் சந்தித்துப் பேசினார்.

அதன் பின்னர் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பில், அகதிகளுக் கான ஐ.நா.தூதரக நிதி உதவியு டன் புனர்வாழ்வு மீள்குடியமர்த்துகை அமைச்சு குடாநாட்டில் மேற்கொள் ளும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு புலிகள் பூரண ஆதரவு அளிக்க முன் வந்துள்ளனர் என்று தெரிவித்தார்.

அகதிகளுக்கான ஐ.நா.தூதரக யாழ். அலுவலகத்தில் நடைபெற்ற இந்த பத்திரிகையாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அகதிகளுக்கான ஐ.நா.தூதர கத்தின் நிதியுதவியுடன் யாழ். குடா நாட்டில் 11 கோடி 20 லட்சம் ரூபா பெறுமதியான அபிவிருத்திப் பணி கள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதன் முதற்கட்டமாக 2 கோடி 15 லட்சம் ரூபா செலவில் ஏற்கனவே குடாநாட் டில் வீடமைப்பு மற்றும் அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது தொடர்பான திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டது.

அந்தத் திட்டம் தொடர்பான மதிப் பீடு எமக்குப் போதிய திருப்தியளிக் கிறது.

யாழ். குடாநாட்டில் உள்ள 90 நலன்புரி நிலையங்களில் மிகவும் மோசமான நிலையில் உள்ள 12 நலன்புரி நிலையங்களுக்கு 1 கோடி 10 லட்சம் ரூபா செலவில் நிரந்தரக் கட்டடங்கள் அமைக்கப்படவுள்ளது டன் குடிதண்ணீர், மலசல கூட வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப் படவுள்ளன. ஏனைய நலன்புரி நிலை யங்களும் படிப்படியாகப் புனரமைக் கப்படவுள்ளன.

நிதி உதவியில் 61 சதவீதம் வீட்டுத்திட்டத்திற்கும், 33 வீதம் சுகா



ஐ.நா. தூதரக அதிகாரியுடன் அமைச்சர் ஜயலத்

தாரம், மீன்பிடி, கல்வி ஆகியவற் றுக்கும் 6 வீதம் குடிதண்ணீர் வசதிக் கும் ஒதுக்கப்பட்டுள்ளன.

5 கோடி ரூபா பெறுமதியான அபிவிருத்திப் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், 4 கோடி ரூபா பெறுமதி யான அபிவிருத்திப் பணிகள் அடுத்த நா கு மாதங்களுக்குள் செய்து முடிக் கப்படவுள்ளன.

இந்த அபிவிருத்திப் பணிகளுக் கான பூரண ஆதரவை வழங்குவதாக விடுதலைப் புலிகள் உறுதியளித்துள ளனர் - என்றார்.

முன்னதாக, யாழ். குடாநாட்டில் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்திப் பணிகள் தொடர்பான கூட்டம் ஒன் றும் அகதிகளுக்கான ஐ.நா.தூதரக யாழ். அலுவலகத்தில் நடைபெற்றது.

அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன, புனர்வாழ்வு அமைச்சின் செயலா ளர் அ.ஜெயரட்ணம், புனர்வாழ்வு அமைச்சின் ஆலோசகர்களான டட்லி திஸாநாயக்க, லக்சுமி விஜயசேகர, அகதிகளுக்கான ஐ.நா.தூதரகத்தின் பணிப்பாளர் நீல் றைற், யாழ். அரச அதிபர் எஸ்.பத்மநாதன் மற்றும் பிர தேச செயலாளர்கள், அரச அதிகாரி கள் ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத் தால் புனரமைக்கப்பட்ட பாடசாலை களைக் கையளிக்கும் நிகழ்வில் கலந்துகொள்ள யாழ்ப்பாணம் வந்த சமயம் அமைச்சர் ஜயலத்துக்கு பல் கலைக்கழக மாணவர்கள் கடும் எதிர்ப் புக் காட்டியிருந்தனர் என்பது குறிப் பிடத்தக்கது. (ம-8)



புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் கடலில் காவியமான விடுதலைப் புலிகளின் மாவீரர்கள் 21 பேரின் உருவப்படங்கள் நல்லூரின் பின் வீதியில் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

# ஹோட்டலுக்குள் புகுந்த தீவிரவாதிகளுடன் இந்தியப் படையினர் சண்டை; 7 பேர் பலி!

காஷ்மீர் தீவிரவாதிகள் ஸ்ரீநகரில் ஹோட்டல் ஒன்றுக்குள் புகுந்து அங்கிருந்தவர்களைப் பணயக் கைதிகளாகப் பிடித்ததைத் தொடர்ந்து, படையினருக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையில் நடந்த சண்டையில் ஏழு பேர் கொல்லப்பட்டனர்.

ஸ்ரீநகரில் பிரதமர் வாஜ்பாய் தலைமையில் முதலமைச்சர்கள் மாநாடு நடைபெற்றுக் கொண்டிருந்த சமயமே மேற்படி சம்பவம் நடந்தது. இது அங்கு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

நேற்றுமுன்தினம் மாலை இரண்டு தீவிரவாதிகள் ஸ்ரீநகருக்குள் ஊடுருவி அதிர்ச்சி தரும் வகையில் தாக்குதலில் ஈடுபட்டனர். அங்குள்ள தொலைத்தொடர்பு நிலையம் ஒன்றைத் தகர்க்கும் நோக்குடன் அவர்கள் சக்தி வாய்ந்த குண்டுகளை வீசினார்கள்.

தொலைபேசி நிலையத்துக்குள் நுழையவும் அவர்கள் முயன்றனர். ஆனால், வாசலில் நின்ற மத்திய பாதுகாப்புப் படையினர் தாக்குதல் நடத்தியதை அடுத்து, நிலை குலைந்த தீவிரவாதிகள் வேறு வழி தெரியாமல் அருகில் இருந்த ஹோட்டலுக்குள் புகுந்தனர். அங்கு பதுங்கி இருந்தபடி பாதுகாப்புப் படையினரை நோக்கிச் சுட்டனர்.

இதையடுத்து, இரண்டு தீவிரவாதிகளையும் பிடிக்க கூடுதல் பாதுகாப்புப் படையினர் அங்கு விரைந்து, அந்த ஹோட்டலைச் சுற்றி முற்றுகையிட்டனர்.

அந்த நான்கு மாடிக் ஹோட்டலின் எந்தப் பகுதியில் தீவிரவாதிகள் பதுங்கி இருக்கின்றனர் என்பதை முதலில் கண்டுபிடிக்க படையினரால் முடியவில்லை. தீவிரவாதிகள் கண்மூடித்தனமாக சுட்டபடி இருந்தனர். இதனால், படையினருக்கும், தீவிரவாதிகளுக்கும் இடையே துப்பாக்கிச் சண்டை மூண்டது.

நேற்று முன்தினமிரவு ஏழு மணிக்குத் தொடங்கிய துப்பாக்கிச் சண்டை நேற்று அதிகாலை வரை நீடித்தது. ஹோட்டலுக்குள் இருந்தபடி தீவிரவாதிகள் சரமாரியாக கை எறிகுண்டுகளையும் வீசினார்கள். இடையிடையே சக்தி வாய்ந்த குண்டுகளையும் அவர்கள் வெடிக்கச் செய்தனர்.

தீவிரவாதிகளின் அட்டகாசம் அதிகரித்தபடி இருந்ததால், நேற்றுக் காலை ஏழு மணியளவில் பாதுகாப்புப் படையின் அதிரடிப் பிரிவினர் திடீரென ஹோட்டலுக்குள் புகுந்தனர். ஹோட்டலுக்குள் சிக்கி இருந்த பொதுமக்கள் 11 பேரை அவர்கள் பத்திரமாக மீட்டனர்.

தீவிரவாதிகள் உட்பட இந்தச் சண்டையில் மொத்தம் ஏழு பேர் பலியானார்கள்.

படையினர் ஹோட்டலுக்குள் நுழைந்ததை அடுத்து தீவிரவாதிகள் சக்தி வாய்ந்த குண்டுகளை அங்கு வெடிக்கவைத்தனர். இதில் ஹோட்டலில் இருந்த எரி வாயு சிலிண்டர்களும் வெடித்துச் சிதறின. இதனால் ஹோட்டல் முழுமையாக எரிந்து போனது.

இதற்கிடையே -

நேற்றுக் காலை செய்தி நிறுவனங்களைத் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்ட லஷ்கர்-இ-தொய்பா அமைப்பினர் இந்தத் தாக்குதலுக்கு தாம் பொறுப்பு ஏற்பதாகக் கூறியுள்ளனர்.

# அமெரிக்கப் படையினர் ஈராக்கில் உயிரிழப்பு!

ஈராக் தலைநகர் பக்தாத்தின் வடக்கிலும், மேற்கிலும் நடந்த இரண்டு தாக்குதல் சம்பவங்களில் அமெரிக்கப் படையினர் இருவர் கொல்லப்பட்டனர்; ஒன்பது பேர் காயமடைந்தனர்.

நேற்றுமுன்தினம் மாலை பக்தாத்தில் இருந்து மேற்காக 60 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள பலூஜா நகரில் ரோந்து சென்ற அமெரிக்கப் படையினர் மீது நடந்த தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டார்; மூன்று பேர் காயமடைந்தனர்.

இரண்டாவது தாக்குதல், பக்தாத்தில் இருந்து 100 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள றமாடி நகரில் அமெரிக்கப்படையினரின் வாகன அணிமீது நடத்தப்பட்டது. இதில் ஒருவர் கொல்லப்பட்டார்; ஆறு பேர் காயமடைந்தனர்.


மேற்படி இரு தாக்குதல்களும் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட குண்டுகளால் நடத்தப்பட்டன என்று பக்தாத்திலுள்ள அமெரிக்கக் கட்டளைப் பீடம் தெரிவித்துள்ளது.

இது இவ்வாறிருக்க,

ஈராக்கில் இருந்து அமெரிக்கப் படையினர் ஒருபோதும் பின்வாங்க மாட்டார்கள் என்று ஜனாதிபதி புஷ் தெரிவித்துள்ளார். அமெரிக்கப் படையினர் மீதான தாக்குதல்கள் நாளாந்தம் அதிகரித்து வருகின்ற போதும், இனிமேல்தான் அவர்கள் முற்று முழுதாக ஒடுக்கப்படுவார்கள் என்று அவர் கூறியுள்ளார்.

சதாம் ஆதரவாளர்கள் மீதான பிடி இறுகி வருவதே அவர்களின் தாக்குதல்கள் நாளாந்தம் அதிகரித்து வருகின்றமைக்குக் காரணம் என்றும் அவர் கூறியுள்ளார்.

# கருணாநிதியை விசாரிக்கச் சென்ற பொலீஸார் திருப்பி அனுப்பப்பட்டனர்!



அரசஊழியர்கள், ஆசிரியர்களை போராட்டம் செய்யத்தூண்டினார் என்று 'எஸ்டா' சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள வழக்குத் தொடர்பாக விசாரிக்க தமிழக குற்றப்பிரிவு பொலீஸார் தி.மு.க தலைவர் கருணாநிதியிடம் விசாரணை நடத்த சென்று, முடியாமல் திரும்பினர்.

கோபாலபுரத்திலுள்ள அவரது வீட்டுக்கு நேற்றுமுன்தினம் திடீரென பொலஸ் படை சென்றது. உதவி ஆணையாளர் லட்சுமி நாராயணர் தலைமையில் சென்ற அந்தப் படையை கருணாநிதியின் கொமாண்டோப் படையினர் தடுத்தனர்.

கொமாண்டோப் படையினரிடம் விசாரணை குறித்த விளக்கங்களை பொலீஸார் விளக்கினர்.

இதையடுத்து, கருணாநிதியின் உதவியாளர்களிடம் பேசுமாறு பொலீஸாரைக் கொமாண்டோப் படையினர் கேட்டுக்கொண்டனர்.

உதவியாளரை சந்தித்த பொலீஸார் கருணாநிதியை சந்திக்க வேண்டும்; அவரிடம் விசாரணை நடத்த வேண்டும் என்று கூறினர்.

ஆனால், முறையான முன் அனுமதி இல்லாமல் திடிரென வந்ததால் விசாரணைக்கு ஒப்புக் கொள்ளமுடியாது என்று உதவியாளர்கள் கூறி விட்டனர்.

இதையடுத்து கருணாநிதியின் அனுமதி இல்லாமல் அவரை விசாரிக்கமுடியாது என கொமாண்டோப் படையினரும் கூறி பொலீஸாரை திருப்பியனுப்பினர்.

மத்திய கொமாண்டோப்படையின் பாதுகாப்பின் கீழ் இருப்பவர்களிடம் விசாரணை நடத்த மத்திய அரசிடமோ அல்லது நீதிமன்றத்திடமோ பொலீஸார் முறையான முன் அனுமதி பெற வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

இதனால் தமிழக முதல்வர் ஜெயலலிதா மத்திய அரசிடம் கருணாநிதியை விசாரணை செய்ய அனுமதி பெற்று, விசாரணை என்ற போர்வையில் அவரை சிறையில் அடைக்க சதி நடக்கிறது என்று திமு.கவினர் குற்றம் சாட்டியுள்ளனர்.



60 ஆயிரம் ஆண்டுகளில் தற்போது பூமிக்கு நெருக்கமாக வந்துள்ள செவ்வாய்க்கிரகத்தைப் பார்ப்பதற்காக ஸ்பானிய நகர் ஒன்றில் கூடியுள்ள மக்களையும், இப்போது எடுக்கப்பட்ட செவ்வாய்க்கிரகத்தையும் படங்களில் காணலாம். (செவ்வாய்க்கிரகத்தின் பனிபடர்ந்த தென்துருவம் அம்புக்குறியால் காட்டப்பட்டுள்ளது.)

# போர் நிறுத்தத்தைக் கடைப்பிடிக்குமாறு தீவிரவாதிகளுக்கு அரபாத் கோரிக்கை

காஸா,ஓக.29

ஏவுகணை வீச்சில் ஹமாஸ் தலைவர் அபுஷானப் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து, இஸ்ரேலுக்கும், பலஸ்தீனத்துக்கும் இடையில் மீறப்பட்ட போர் நிறுத்த ஒப்பந்ததை மீண்டும் கடைப்பிடிக்குமாறு பலஸ்தீன தீவிரவாதக் குழுக்களுக்கு அதிபர் யசீர் அரபாத் கோரிக்கை விடுத்துள்ளார்.

அமெரிக்காவின் சமாதானத் திட்டத்தை நிறைவு செய்யும் சர்வதேசத்தின் விருப்புகளுக்கு ஒரு வாய்ப்புத் தருமாறு அவர் கேட்டுள்ளார். அத்துடன், சமாதானத் திட்டத்தை மீறி பலஸ்தீன நகரங்களை ஆக்கிரமித்துள்ள இஸ்ரேலின் நடவடிக்கையையும் அவர் கண்டித்துள்ளார்.

தீவிரவாதக் குழுக்களுக்கு அதிபர் யசீர் அரபாத் விடுத்துள்ள இந்தக் கோரிக்கை வெறும் பிரசாரமே என்று தெரிவித்துள்ள இஸ்ரேல், பலஸ்தீனத்தின் சமாதானத் திட்டத்தை நிராகரிக்கப் போவதாகவும் கூறியுள்ளது.

அத்துடன், தீவிரவாதக் குழுக்கள் கலைக்கப்படும் வரை தாம் அவர்களை அழிக்கப்போவதாகவும் இஸ்ரேல் கூறியிருக்கிறது.

"அரபாத்தின் கோரிக்கை அர்த்த மற்றது; சமாதானத்தில் அவருக்கு ஆர்வம் இல்லை" என்று இஸ்ரேலிய பிரதமர் ஏரியல் ஷெரோனின் ஆலோசகர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே - பெத்தலஹேமில் கத்தியுடன் நடமாடிய பலஸ்தீனர் ஒருவரை இஸ்ரேலியப் படையினர் சுட்டுக்கொன்றுள்ளனர்.

இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்கும் இடையில் தொடரும் வன்முறைகள் குறித்து சிறையிலிருந்தபடியே கைத்தொலைபேசி மூலம் உரையாடியுள்ள பலஸ்தீன இடதுசாரி இயக்கத் தலைவர், அமெரிக்கப் படைகளுக்கு ஈராக்கியர்கள் காட்டும் எதிர்ப்பைப் போல பலஸ்தீனர்களும் இஸ்ரேலியர்களுக்கு எதிர்ப்புக் காட்ட வேண்டுமென்று கூறியுள்ளார்.

# துப்பாக்கிதாரியின் தாக்குதலில் சிக்காக்கோவில் 6 பேர் மரணம்!

## பொலீஸார் அவரையும் சுட்டுக் கொன்றனர்

சிக்காக்கோ,ஓக.29

சிக்காக்கோவிலுள்ள வாகன உதிரிப்பாகங்கள் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த கட்டடம் ஒன்றினுள் நுழைந்த துப்பாக்கிதாரி அங்கிருந்த ஆறு பேரை சுட்டுக் கொன்றார். துப்பாக்கிதாரியும் பொலீஸாரால் சுடடுக்கொல்லப்பட்டார்.

நேற்று முன்தினம் மாலை மேற்படி கட்டடத்துக்குள் திடீரென நுழைந்த சல்வடோர் (வயது-36) என்ற துப்பாக்கிதாரி, அங்கிருந்தவர்களை கடுமையான வார்த்தைகளால் திட்டித் தீர்த்துவிட்டு சரமாரியாக துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்.

இதனால், சம்பவ இடத்திலேயே ஆறுபேர் பரிதாபமாக கொல்லப்பட்டனர். சம்பவத்தை அறிந்த பொலீஸார் உடனடியாக அந்தக் கட்டடத்தைச் சுற்றி வளைத்தனர். துப்பாக்கிதாரியுடன் தொலைபேசி மூலம் அவர்கள் தொடர்பு கொண்டனர்.

எனினும், பொலீஸார் சரணடையுமாறு விடுத்த கோரிக்கையை அவர் ஏற்க மறுத்தார். சுமார் ஒரு மணி நேரம் இந்தப் பேச்சுக்கள் நடந்தன.

ஆனால், பொலீஸாரின் கோரிக்கைகளை செவிமடுக்காது கட்டடத்திற்கு வெளிப்புறத்தை நோக்கியும் அவர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்.

இதனால், பொலீஸார் கட்டடத்தினுள் நின்ற அவரை கண்மூடித்தனமாக துப்பாக்கிப் பிரயோகம் செய்து சுட்டுக்கொன்றனர்.

மேற்படி களஞ்சியசாலையிலிருந்து ஆறு மாதங்களுக்கு முன்னர் பணி நீக்கம் செய்யப்பட்ட இவர், கிரிமினல் குற்றச்சாட்டுகளுக்காக கைது செய்யப்பட்டு, விடுவிக்கப்பட்டிருந்த நிலையிலேயே மேற்படி ஆறு பேரையும் சுட்டுக் கொன்றுள்ளார்.

பணிக்கு அடிக்கடி சமுகம் அளிக்காது விடுதல், தாமதித்து வருதல், வேலை செய்யும் போது பிறருக்கு தொந்தரவு கொடுத்தல் போன்ற காரணங்களால் இவர் பணிநீக்கம் செய்யப்பட்டிருந்தார்.

1999ஆம் ஆண்டு சிக்காக்கோவில் 16 பேரும், 2000ஆம் ஆண்டு 7 பேரும், 2001ஆம் ஆண்டு 6 பேரும் இவ்வாறு பணி நீக்கம் செய்யப்பட்ட ஊழியர்களால் சுட்டுக்கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

CAREER IN INFORMATION TECHNOLOGY

JOIN OUR TEAM

Our Computer Training Organisation seeks staff members for the following Catagories.

VACANCY FOR



Center Manager - Male
with 2 years experience
Training Manager - Male
with 2 years experience
Center Supervisor - Female
with 2 years experience
Lecturer - English Language - Part Time
Lecturer - Hardware Technology - Part Time
Lecturer For Programming Languages
C,C++, Java, VB, ASP, XML & Oracle
Lecturer For Digital Visual Communication
Instructor Male or Female
MS Office, Programming module, Graphic Design

*The Applicants should posses the following basic requirements of our organisation.*
- *Good Command in English.*
- *Excellent Service attitude.*
- *Full or Part professional qualification essential.*
- *Short term training will be given at Colombo if selected.*

If Interested, please send your application with in 14 days.

*The Human Resource Manager*
ASIAN BUSINESS COLLEGE,
No. 250, George R.de Silva Mawatha,
Kotahena, Colombo-13.

(C/29817)



இளவாலை சாடிவளை இந்து இளைஞர் சனசமூக நிலையத்தின் 50 ஆவது ஆண்டு விழாவில் கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்ட இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் மற்றும் விருந்தினர்கள் மாலை அணிவித்து வரவேற்கப்படுவதைப் படத்தில் காணலாம். (எ)

# பிரதேச மட்டத்தில் சமூக விகிதாசாரத்தின்படி பொலிஸ் நிலையங்களை உருவாக்க வேண்டும்

## எம்.எச்.சேகு இஸ்ஸதீன் எம்.பி.கூறுகிறார்

'வடக்கு - கிழக்கில் சட்டத்தையும் ஒழுங்கையும் மேம்படுத்தவும், அங்கு வாழும் சகல சமூகங்களினது அமைதியையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தவும் அப்பகுதியிலுள்ள சகல உள்ளூராட்சி மன்றங்களுக்கும ஒவ்வொரு பொலீஸ் நிலையம் உருவாக்கப்பட வேண்டும்.

- இவ்வாறு தேசிய ஐக்கிய முன்னணியின் செயலாளர் நாயகம் எம்.எச். சேகு இஸ்ஸதீன் எம்.பி.தெரிவித்துள்ளார்.

பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கிழக்கில் ஏற்பட்டு வரும் பதற்ற நிலையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் நோக்கில் பொலீஸ் படையை விஸ்தரிக்கும் அரசாங்கத்தின் ஆலோசனைக்கு எதிர்ப்புகள் கிளம்பியுள்ளமை ஆச்சரியத்தைத் தருவதாக இருக்கிறது. குறிப்பிட்ட ஒரு சமூகத்திற்கு ஆதரவாகவோ அல்லது குறிப்பிட்ட ஒரு சமூகத்தவருக்கு மாத்திரமோ பொலீஸ் படையில் ஆள் சேர்த்துக் கொள்ளப்படுமானால், அதனை எல்லாச் சமூகங்களும் சேர்ந்தே எதிர்க்க வேண்டும்.

செல்வாக்கிழந்துவரும் ஒரு கட்சிக்கு முண்டுகொடுத்து அதைத் தூக்கி நிறுத்துவதாக பொலீஸுக்கான ஆள்சேர்ப்பு நடைபெறுமானால் அதனை அனைவரும் எதிர்ப்பதில் நியாயம் காணமுடியும்.

ஆனால், வடக்கு - கிழக்கில் வாழும் சகல சமூகங்களையும் சேர்ந்த மக்களின் அமைதி, பாதுகாப்பு ஆகியவற்றை உறுதிப்படுத்துவதற்கும், அங்கெல்லாம் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நிறுத்துவதற்கும சகல சமூகத்தவர்களையும் உள்ளடக்கியவாறு பொலீஸ் படையை விஸ்தரிப்பதில் எவருக்கும் எந்த ஆட்சேபனையும் இருக்க முடியாது.

எனினும், பொலீஸ் படையை விஸ்தரிப்பதில் கையாளப்பட வேண்டிய வழிகள், எதிர்பார்க்கும் பலன்களை அளிக்க முடியாது இருக்குமானால் அமைதிக்குப் பதிலாகக் குழப்பத்தை ஏற்படுத்துவதிலேயே இது முடியும்.

இன்று வடக்கு - கிழக்கு முழுவதிலும் பாதுகாப்பு, சட்டம், ஒழுங்கு என்பவற்றையும் வளர்த்தெடுக்க வேண்டிய அவசியமுள்ளது.

அதற்காக கிழக்கில் உள்ள ஒவ்வொரு பிரதேசசபை மட்டத்திலும் ஒவ்வொரு பொலீஸ் காவல் நிலையத்தை உருவாக்குவது அவசியமாகும். ஒவ்வொரு பிரதேச சபையின் இட ஆதிக்கத்துக்கு அமைவாகவும், அங்கு வாழும் சமூகங்களின் விகிதாசாரத்தின் அடிப்படையிலும் பொலீஸார் நியமிக்கப்பட வேண்டும். அவ்வாறு தெரிவுசெய்யப்பட்டு நியமிக்கப்படும் பொலீஸார் அந்தந்த மக்களின் மொழியில் வாக்கு மூலங்களைப் பதிவுசெய்வதற்கும் ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

தமிழ் முஸ்லிம் பிரதேசங்களில் கடமையாற்றும் சிங்களப் பொலீஸார்களுக்குப் பதிலாக அந்தந்த சமூக பொலீஸார்களை நியமிப்பதே சிறந்த முறையாக இருக்கும். இதனை வெற்றிகரமாகச் செய்வதற்கு இன்னும் அதிக பொலீஸாரை நியமிக்க அரசு தயாராக இருக்கவேண்டும் - இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# கைதடி மருந்தகத்திற்கு டாக்டர் நியமனம்

கைதடி, ஒக.29

கைதடி அரச மத்திய மருந்தகத்திற்கு கடந்த வாரம் தொடக்கம் வைத்தியர் ஒருவர் பிராந்திய சுகாதாரசேவைகள் திணைக்களத்தினால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

பாடசாலைகளுக்கான வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றி வரும் டாக்டர் என்.சர்வானந்தன் என்பவரே இவ்வாறு நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

காலை 8 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை பாடசாலைகளிலும், பிற்பகல் 2 மணி தொடக்கம் மாலைவரை கைதடி அரச மத்திய மருந்தகத்திலும் இவர் கடமை புரிவார் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ)

# பிள்ளைகளைக் கடத்தியவருக்கு 2 வருடக் கடூழியத் தண்டனை

வவுனியா,ஓக.29

வவுனியா நகரின் பொதுவைத்தியசாலையில் சிறுபிள்ளைகளைக் கடத்தி அவர்களின் நகைகளினை கொள்ளை அடித்த நபருக்கு வவுனியா மாவட்ட நீதிவான் எம். இளஞ்செழியன் இரண்டு வருட கடூழிய சிறைத்தண்டனை விதித்தார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சூசை சுதர்ஷன் (வயது - 22) என்ற நபரை சந்தேகத்தின் பேரில் வவுனியா பொலீஸார் கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

சந்தேகநபர் பொதுவைத்திய சாலையில் இருந்த 3,5வயது சிறுமிகளினைக் கடத்திச் சென்று அவர்களிடம் இருந்த நகைகளினை அபகரித்தபின் இராணுவ கட்டுப்பாடற்ற பகுதியில் விற்றார் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் காரணமாக கடுமையான நோய்கள் உள்ள பிள்ளைகளைக் கூட பெற்றோர் வைத்திய சாலைக்குக் கொண்டு வர அஞ்சும் நிலை ஏற்பட்டிருக்கிறது. சந்தேக நபர் குற்றத்தை ஒப்புக்கொண்டார். (எ)

## கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் 4 வைத்தியர்கள் மட்டுமே கடமையில் உள்ளனர்

மருதங்கேணி,ஓக.29

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள வைத்தியசாலைகளில் 4 மருத்துவ அதிகாரிகளே கடமையாற்றி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள மக்களின் புள்ளி விவரங்களுக்கு ஏற்ப 62 மருத்துவ அதிகாரிகள் சேவையில் இருக்க வேண்டிய நிலை உள்ளது என்றும் - எனினும், நான்கு மருத்துவ அதிகாரிகளே கடமையில் உள்ளனர் என்றும் கூறப்பட்டது.(எ)

## வீதிதொடர்ந்தும் மூடப்பட்டநிலையில்

வரணி,ஓக.29

வரணி வடக்கு, வாழைத் தோட்டத்தில் இருந்து இடைக்குறிச்சிக்கு செல்லும் பாதை இன்று வரை பொது மக்கள் பாவனைக்கு திறந்துவிடப்படவில்லை.

1995 ஆம் ஆண்டு இடம்பெற்ற யுத்த நடவடிக்கைகளை அடுத்து வரணி வடக்குப் பகுதியில் உள்ள சகல வீதிகளும் சீருடையினரால் போககுவரத்துக்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. பின்னர் குறிப்பிட்ட சில வீதிகள் மட்டும் சீருடையினரால் போக்குவரத்துக்கு அனுமதிக்கப்பட்டது.

ஆனால், மேற்படி வீதி இன்று வரை மக்கள் பயன்பாட்டுக்கெனத் திறந்து விடப்படவில்லை. அத்துடன் வீதியை மூடி பற்றைகளும் வளர்ந்துள்ளன. (எ-170)

# தெற்கில் ஆர்ப்பாட்டங்களுக்கு அனுமதி; ஆனால் பொங்குதமிழுக்கு மட்டும் தடை!

## வவுனியா அரசியற்றுறைப் பொறுப்பாளர் உரை

வவுனியா,ஓக.29

"சமாதானம் வேண்டாம் என்பதை வலியுறுத்தும் தென்பகுதி ஆர்ப்பாட்டங்களுக்குத் தடையில்லை; ஆனால், சமாதானத்தை வலியுறுத்தும் பொங்கு தமிழ் நிகழ்வுக்கு மட்டும் படையினர் தடைவிதிக்கின்றனர். இது எந்த விதத்தில் நியாயமாகும்'' என்று ஆதங்கம் வெளியிட்டுள்ளார் புலிகளின வவுனியா மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலன்.

வவுனியாவில் அடுத்தமாதம் நடதத்தப்படவுள்ள பொங்குதமிழ் நிகழ்வு தொடர்பான கூட்டத்தில் அரசாங்க உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டமை தொடர்பாக விளக்கம் கேட்டு அந்த உத்தியோகத்தர்களுக்கு வவுனியா மாவட்ட இராணுவத் தளபதியால் அனுப்பிவைக்கப்பட்ட கடிதங்கள் குறித்துக் கேட்டபோதே அவா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பொங்குதமிழ் நிகழ்வு தொடர்பான முன்னேற்பாட்டுக் கூட்டம் ஒன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் நடைபெற்றபோது இக் கூட்டத்தில் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், கிராமசேவை அலுவலர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். இதனையடுத்தே இராணுவத் தளபதியால் விளக்கம்கோரி அவர்களுக்குக் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இதுதொடர்பாக எழிலன் மேலும் தெரிவித்ததாவது:-

தென்பகுதியில் உள்ள இனவாத சக்திகள் தாம் நினைத்ததை நடத்துவதற்கு படையினர் எவ்வித தடையும் விதிக்காமல் அனுமதி வழங்குகின்றனர். ஆனால், சமாதானத்தை வலியுறுத்தி எமது மக்களும் பொது அமைப்புக்களும் நடத்துகின்ற போராட்டங்களுக்கு தடைவிதிப்பது பெரும் மனித உரிமை மீறலாகும்.

படையினர் பொங்குதமிழ் நிகழ்வை விடுதலைப் புலிகளே நடத்துவதாகவும் இது புலிகளின் நிகழ்வு என்றும் பொய்ப்பிரசாரம் செய்து வருகின்றனர். இது புலிகளின் நிகழ்வு அல்ல. மக்கள் தமது உரிமைகளுக்காகச் செய்யும் நிகழ்வு என்றும் அவர் தெரிவித்தார். (ஒ-10)

# இடைக்கால நிர்வாகம் அமையுமானால் மேலும் பல சிக்கல்கள் உருவாக நேரிடும்!

## தேசிய பிக்குகள் முன்னணி எச்சரிக்கை

கொழும்பு,ஓக.29

வடக்கு-கிழக்கிற்கான இடைக்கால நிர்வாக சபை அமைக்கப்படுமானால் நாடு மேலும் பல சிக்கல்களை எதிர்நோக்க நேரிடலாம் என தேசிய பிக்குமார் முன்னணி எச்சரித்துள்ளது.

தற்போதைய சமாதான நடவடிக்கையினால் நாடு இக்கட்டான நிலைமையை எதிர்நோக்கியுள்ளதாகவும் அவர்கள் சுட்டிகாட்டியுள்ளனர்.

நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி சிறந்த எதிர்காலம் ஒன்றை ஏற்படுத்துவதே பௌத்த பிக்குகளின தலையாய கடமை.

நாட்டின் இறைமையைப் பாதிக்கக்கூடிய இயக்கங்களின் செயற்பாடுகளைத் தோற்கடிக்க பௌத்த பிக்குகள் ஒன்றிணையவேண்டும் என்று கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேசிய பிக்குமார் முன்னணியின் இரண்டாவது தேசிய மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (எ)


## விற்பனைக்கு

தச்சுவேலை செய்யும் சைனா மெசின்கள் 10", 12", 14", 16" ஆகியனவும் மின்சார ரீல்லர்கள், அலுமினிய கட்டிங் மெசின், டிசைன் சீவும் றவுட்டர்கள், ஜெனரேட்டர்கள், வெல்டிங் பிளான்ற், இவற்றிற்கான உதிரிப்பாகங்களும் வேறு வகை மின்சார சாதனங்களும் விற்பனைக்குண்டு.

தொடர்பு:
கி.சுதாகரன்
இல.20, இரண்டாம் ஒழுங்கை,
அரசடி வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(சி-29776) (21-15-19)



## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை அதிபரின் பாசமிகு மாமனார்

**அமரர் சதாசிவம் சொக்கலிங்கம்**

அவர்கள் காலமானதையிட்டு துயரில் ஆழ்ந்திருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யா/ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம்.

(21950) (26-21-15-19)



## விசேட பொதுக்கூட்டம்

**காங்கேசன் சிமெந்து பொதுத்தொழிலாளர் யூனியன்**

காங்கேசன் சிமெந்து பொதுத்தொழிலாளர் யூனியனின் விசேட பொதுக்கூட்டம் 31.08.2003 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். ப.நோ.கூ. சங்க மண்டபத்தில் நடைபெறும். இக்கூட்டத்திற்கு எமது யூனியனின் சகல உறுப்பினர்களும் தவறாது சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

- செயலாளர்.

(21948)(21-15-19)



## 13ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
05 - 11 - 1917



உதிர்வு
18 - 07 - 1990

**அமரர் வைத்திலிங்கம் சிங்கவேலு**

(முன்னாள் உரிமையாளர், மருதனார்மடம் எரிபொருள் நிலையம்)

திதி: 2003.08.29

ஆத்மசாந்திக்கு இறைவனை இறைஞ்சுகின்றோம்.

238, கோவில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(21946)(25-21-15-19)



உ
குகமயம்

## சிவாச்சார்யாபிஷேக அழைப்பு

(குருப்பட்டம்)

*பேரன்புடையீர்!*

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்களகரமான சுபானு வருடம் ஆவணி மாதம் 12ஆம் நாள் இன்று (29.08.2003) வெள்ளிக்கிழமை பூர்வபட்ச துதியையும் உத்தர நட்சத்திரமும் சித்தாமிர்த யோகமும் கூடிய காலை 9.30 மணி முதல் 10.30 மணிவரையுள்ள கன்னிலக்கின சுபமுகூர்த்த வேளையில் இளவாலை மாரீசன்கூடல் தலப்பராகிரி ஸ்ரீவல்லி தேவசேனா சமேத சிவசுப்பிரமண்ய தேவஸ்தான ஸ்தாணிக அர்ச்சகர்

பிரம்மஸ்ரீ **நாராயணக் குருக்கள் ராஜேஸ்வர சர்மா**

அவர்களுக்கு சமய, விசேஷ, நிர்வாண தீட்ச சிவாச்சார்யாபிஷேகம் நடைபெறத் திருவருள் கைகூடியுள்ளதால் அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தங்கள் இஷ்டமித்திர பந்து சகிதம் குடும்ப சமேதராக வருகை தந்து ஆசீர்வதித்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

வித்தியா அச்சரகுரு
ஸ்ரீலஸ்ரீ நா. சோமாஸ்கந்தக் குருக்கள்,
சுழிபுரம் குடியிருப்பு.

தீட்சாகுரு - சிவஸ்ரீ வை சோமாஸ்கந்தக்குருக்கள்
(இணுவில் சர்வபோதகம்), -
சிவஸ்ரீ தா. மகாதேவக்குருக்கள்
(குருகுல அதிபர் காயத்திரிபீடம், இணுவில்).

(21955) (21-11-16)

## உதயன்

# ஜனாதிபதி - பிரதமர் புரிந்துணர்வு உடன்படிக்கை?

விசேட விருந்தினராக இங்கே வந்திருந்த பின்லாந்தின் முன்னாள் ஜனாதிபதி மார்தி அஹ்திவாரி உலகப் பிரசித்திபெற்ற தலைவர்களில் ஒருவர்.

அரசியல் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் ஆழ்ந்த அறிவும் நீண்டகால அனுபவமும் உடையவர்.

இந்த நாட்டின் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பது தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உட்படத் தலைவர்கள் பலர் அவருடன் கலந்தாலோசனை நடத்தினார்கள்.

சமாதானத்தை ஏற்படுத்துவதற்குத் தலைவர்கள் கட்சி அரசியலுக்கு அப்பால் நின்று நாட்டு நலனைக் கருத்திற்கொண்டு பணியாற்ற வேண்டும். முக்கியமாக இதுதான் பின்லாந்தின் முன்னாள் ஜனாதிபதி கூறிய அறிவுரையும், ஆலோசனையும் ஆகும்.

தேசியப் பிரச்சினையான இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்குத் தலைவர்கள், குறிப்பாக நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் நாடாளுமன்ற அரசாங்கத் தலைவரான பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் கூட்டாக முயற்சி செய்ய வேண்டும் என்று பலரும் சதா வேண்டுகோள் விடுத்து வருகிறார்கள்.

இருவரும் தாம் கூட்டாகப் பணியாற்ற முயற்சி செய்து வருவதாகவே கூறுகிறார்கள். ஆனால், உண்மையாகவும் அர்ப்பணிப்போடும் அவர்கள் அந்த முயற்சியில் ஈடுபட்டு வருகிறார்களா என்பதுதான் கேள்வி.

மாற்றுக் கட்சிகளைச் சேர்ந்த இரு தலைவர்களும் தத்தமது கட்சிகளின் நலன்களைக் கவனிப்பதில் முக்கியகவனம் செலுத்த நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். அதனால், இனப்பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்த்துவைப்பதற்கான அரிய சந்தர்ப்பத்தைக் கோட்டை விடுகிறார்கள்.

விடயத்தைக் கெடுக்கக்கூடாது. ஒத்திசைவாக நடந்து காரியமாற்றவேண்டும் என்று அவர்கள் நினைத்துச் செயற்பட்டாலும் அந்தச் செயற்பாடுகள் பரஸ்பரம் சந்தேகத்தை ஏற்படுத்துவனவாகவே அமைந்துவிடுகின்றன.

இனப்பிரச்சினைக்கு பேச்சு மூலம்தான் தீர்வு காணவேண்டும் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க திரும்பத் திரும்பக் கூறிவருகிறார். பேச்சு மூலம் தீர்வுகாண வேண்டும் என்று முன்னுதாரணம் காட்டியவரும் தாமே என்று ஜனாதிபதி பெருமையாகக் கூறிக்கொள்கிறார்.

அதேவேளை, வடக்கு - கிழக்கு இணைப்பு, இடைக்கால நிர்வாகம் முதலானவை பற்றி அவர் அடிக்கடி வெளியிட்டுவரும் கருத்துக்கள் சமாதான முயற்சிகளை முறியடிக்கும் வகையிலேயே அமைந்திருக்கின்றன.

சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வதற்கு அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் ஜனாதிபதிக்குச் சந்தேகத்தை ஏற்படுத்துகின்றன.

புலிகளோடு பேசக்கூடாது. அவர்களைப் போரில் தோற்கடித்து விட்டுத் தமிழ்மக்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாணவேண்டும் என்ற கருத்துடைய இனவாத, போர் வெறிக்கட்சியுடன் கூட்டுச் சேர்ந்தாவது ஆட்சிக்கு வரவேண்டும் என்ற உந்தலும் அவருடைய கட்சியில் உள்ளவர்களின் நெருக்குவாரங்களும் ஜனாதிபதியை ஆட்டிப்படைக்கின்றன.

அதேபோல, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும், ஜனாதிபதியின் நடவடிக்கைகளில் கொண்டுள்ள சந்தேகத்தால் தாமும் பிடிகொடுக்காமல் காய்களை நகர்த்த வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகியிருக்கின்றார். அவரும் ஒரு கட்சித் தலைவர். கட்சி ஆதரவாளர்களுக்குப் பதில் சொல்ல வேண்டியவர்.

இந்தநிலையில், குறுகிய மனப்பான்மையை விட்டெறிந்துவிட்டு, கட்சி நலன்களை மட்டும் கவனித்துக்கொண்டு இருக்காமல் நாட்டின் அனைத்து மக்களின் நல்வாழ்வுக்குமாக இணைந்து பணியாற்றுவதற்கும், இனப்பிரச்சினையைத் தீர்த்து நிலையான சமாதானத்தை ஏற்படுத்துவதற்கும் ஜனாதிபதி, பிரதமர் ஆகிய இரு தலைவர்களும் தமக்குள் புரிந்துணர்வு உடன்படிக்கைசெய்து கொள்ளவேண்டும் என்று ஆலோசனை கூறப்படுகிறது.

மிகுந்த அனுபவசாலியான பின்லாந்தின் முன்னாள் ஜனாதிபதி கூறிய வழியில் இந்த நாட்டிலே ஜனாதிபதியும், பிரதமரும் கூட்டு முயற்சிமூலம் பிரச்சினைக்குத் தீர்வுகண்டு நிலையான சமாதானத்தை ஏற்படுத்த இந்தப் புரிந்துணர்வு உடன்படிக்கை பெரிதும் உதவும்.

இருவரும் புரிந்துணர்வு உடன்படிக்கை செய்து கொள்ள முன்வருவார்களா? உடன்படிக்கைசெய்து கொண்டாலும் கூட அதை மீறாமல் இருவரும் நடந்து கொள்வார்களா?

# பாடசாலை ஆசிரியர் பல்கலையில் உள்வாரி மாணவராக இருக்கமுடியாது

## மாகாண கல்விச் செயலாளர் மீண்டும் அறிவுறுத்து

திருகோணமலை,ஓக.29

வடக்கு - கிழக்கு மாகாண பாடசாலைகளில் கற்பித்துக் கொண்டு பல்கலைக்கழகங்களிலும் உள்வாரி மாணவர்களாகக் கல்வி கற்கும் ஆசிரியர்கள்மீதும், அவர்களுக்குத் துணைபுரியும் அதிபர்கள்மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

- இவ்வாறு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அறிவித்துள்ளார்.

ஆசிரியர் ஒருவர் தகுதிகாண் காலம் முடிவடைவதற்கு முன்பு, முறையாகக் கற்கை விடுமுறையைப் பெறாமல் பாடசாலையில் கற்பித்துக்கொண்டு பல்கலைக்கழகத்தில் அல்லது கல்வியியற் கல்லூரியில் உள்வாரி மாணவராக கற்பது ஏற்கனவே தடைசெய்யப்பட்டுள்ளது.

எனினும், இது விடயத்தில் தொடர்ந்து ஆசிரியர்களும், அதிபர்களும் கவனயீனமாக நடந்து கொள்வது பற்றி மாகாண கல்வியமைச்சுக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

முழுநேர சேவையில் ஈடுபடவேண்டிய ஆசிரியர்கள் பல்கலைக்கழகங்களில் உள்வாரி மாணவர்களாகப் பாடநெறிகளைப் பின்பற்றுவதன்மூலம் தம்மிடம் கல்வி கற்கும் மாணவர்களுக்கு ஆற்றவேண்டிய கடமைகளைச் செய்வதற்குத் தடை ஏற்படுகின்றது.

இது முற்றிலும் சட்டத்திற்கும், இறைமைக்கும் விரோதமான செயல் என்று கல்வியமைச்சின் செயலாளர் சுட்டிக்காட்டியுள்ளார். இவ்வாறான ஆசிரியர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொண்டு அவர்களை பதவியிலிருந்து நீக்கவேண்டியேற்படும் என்றும் - அவர் தெரிவித்துள்ளார்.

எனினும், ஆசிரியர்கள் தமது கற்பித்தல் கடமைகளுக்கு தடை ஏற்படாதவாறு வெளிவாரி மாணவர்களாகப் பல்கலைக் கழகங்களில் பாடநெறிகளைப் பின்பற்றுவதில் தவறேதுமில்லை என்றும் - அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# உயர் பாதுகாப்பு வலய விவரம் யாழ். செயலகம் திரட்டுகின்றது

யாழ்ப்பாணம்,ஓக.29

குடாநாட்டில் உயர்பாதுகாப்பு வலயங்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ள பிரதேசங்கள் தொடர்பான சகல விவரங்களும் யாழ். செயலகத்தினால் திரட்டப்பட்டு வருகின்றன.

இது தொடர்பான விவரங்களை அனுப்பிவைக்குமாறு செயலகத்தினால் ஒவ்வொரு பிரதேச செயலகங்களுக்கும் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் உயர்பாதுகாப்பு வலயம் எனக் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேசத்தின் விஸ்தீரணம், அதற்குள் அடங்கும் கிராம அலுவலர் பிரிவுகள், கிராமத்தின் பெயர் ஆகியவற்றைத் தெளிவாகக் குறிப்பிட்டு அனுப்பிவைக்குமாறு செயலகத்தினால் கேட்கப்பட்டுள்ளது.

உயர்பாதுகாப்பு வலயங்கள் என்ற போர்வையில் குடாநாட்டில் பல விவசாய நிலங்களும் மக்கள் குடியிருப்பு பிரதேசங்களும் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. இதனால் குடாநாட்டில் இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர முடியாதநிலை ஏற்பட்டுள்ளது.

இந்த உயர்பாதுகாப்பு வலய விவகாரங்களும் சமாதானப் பேச்சு இடைநிறுத்தப்படுவதற்கான காரணங்களில் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது. (ம-10-76)

# களவு, திருட்டுக்களைத் தடுப்பதற்கு வீதிகளுக்கு மின்விளக்கு பொருத்துங்கள்

## யாழ்.அரச அதிபர் மின்சார சபையிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஓக.29

குடாநாட்டில் வீடுகளுக்கு மின்சாரம் வழங்குவதன் மூலம் இங்குள்ள அடிப்படைப் பிரச்சினைக்குத் தீர்வுகாணமுடியாது. களவு, திருட்டுக்களைத் தடுக்க வீதிகளில் மின் விளக்குகள் பொருத்தவேண்டும்.

இப்படியான கோரிக்கை ஒன்றை யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் மின்சார சபையிடம் விடுத்துள்ளார்.

மின்சார சபைத் தலைவருக்கும் பிரதமரின் அலுவலக அதிகாரிகளுக்கும் அனுப்பியுள்ள கடிதத்திலேயே அரச அதிபர் இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

குடாநாட்டுக்கு போதியளவு மின்சார வசதி இதுவரை செய்யப்படவில்லை என்பதனை முதலில் கவலையுடன் தெரிவிக்க விரும்புகிறேன்.

குடாநாட்டில் வீடுகளுக்கு மட்டும் மின்சாரம் வழங்கப்படுகின்றது. அதனால் மக்கள் எதிர்நோக்கும் சில பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது. குடாநாட்டில் உள்ள சகல வீதிகளுக்கும் மின் விளக்குகளைப் பொருத்துவதன்மூலமே அவற்றுக்குத் தீர்வுகாணமுடியும்.

வீதிகள் எல்லாம் இருட்டில் மூழ்கிக் கிடக்கின்றன. இதன் காரணமாக விபத்துக்கள் அதிகரிக்கின்றன. களவு, திருட்டுக்கள் தாராளமாக நடக்கின்றன.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண வீதிகளில் மின் விளக்குகள் பொருத்தப்படவேண்டும்.

கடந்த வாரம் யாழ்ப்பாணம் வந்த ஆசிய அபிவிருத்தி வங்கி அதிகாரிகள் குடாநாட்டின் மின் விநியோக அபிவிருத்திக்கு உதவுவதாகத் தெரிவித்தனர். வீதிகளுக்கு மின் விளக்குகள் பொருத்த உதவும்படி அவர்களிடம் கோரினேன். 'இதற்குத் தாங்கள் உதவமுடியாது. இந்த வேலையை மின்சார சபைதான் செய்யவேண்டும்' என்று அவர்கள் என்னிடம் தெரிவித்தனர்.

எனவே, குடாநாட்டில் மக்கள் பிரச்சினைக்குத் தீர்வுகாண வீதிகளுக்கு உடன் மின் விளக்குகளைப் பொருத்தவேண்டும் - என்று அக்கடிதத்தில் அரச அதிபர் கேட்டுள்ளார். (ம-3)

# தீவகத்துக்கான 'அம்புலன்ஸ்' படகை நெடுந்தீவில் நிறுத்த ஏற்பாடு செய்க!

## ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம்,ஓக.29

அண்மையில் புதிதாக வடிவமைக்கப்பட்ட தீவகத்துக்கான 'அம்புலன்ஸ்' படகை நெடுந்தீவில் தரித்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

அண்மையில் நடைபெற்ற நெடுந்தீவுப் பிரதேசத்துக்கான ஒருங்கிணைப்புக் குழுவின் கூட்டத்தில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவு உதவி அரச அதிபர் ச.பேரானந்தம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அப்பகுதி அரச நிறுவனங்களின் தலைவர்கள், பிரதேச சபையின் செயலாளர், வைத்திய அதிகாரி, கூட்டுறவாளர்கள், விவசாய சம்மேளனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் மேலும் பல விடயங்கள் குறித்து ஆராயப்பட்டன. அவை வருமாறு:-

★ பல்வேறு தரத்திலான வைத்திய அதிகாரிகள் கடமையாற்ற வேண்டிய நெடுந்தீவு வைத்தியசாலையில் தற்போது பதிவுபெற்ற மருத்துவ அதிகாரி ஒருவர் மட்டுமே கடமையாற்றுகின்றார். மேற்படி வைத்திய அதிகாரி லீவு பெறும் சந்தர்ப்பங்களிலும், போதிய மருந்துவகைகள் கையிருப்பில் இல்லாத சந்தர்ப்பங்களிலும் நெருந்தீவு வைத்திய சேவையில் நெருக்கடி நிலை ஏற்படுகின்றது.

அத்துடன், வைத்தியசாலைக்குத் தேவையான குளிரூட்டி போன்ற பல்வேறுபட்ட உபகரணங்கள் பழுதடைவதால், குறிப்பிட்ட மருந்து வகைகளைப் பாதுகாக்க முடியாதநிலை ஏற்படுவதுடன், சாதாரண சிகிச்சைகளையோ அல்லது தீவிர சிகிச்சைகளையோ மேற்கொள்ள முடியாது நோயாளிகளை வேறொரு வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கவேண்டிய நிலையுள்ளது.

★ ஏனைய தீவுகளிலிருந்து ஒப்பீட்டளவில் மிகநீண்ட தூரத்தில் நெடுந்தீவு உள்ளது. எனவே, இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த அவசர சிகிச்சைக்கு உட்படுத்த வேண்டிய நோயாளிகளை அழைத்துச்செல்ல தீவகங்களுக்கான அம்புலஸ் படகை நெடுந்தீவில் நிறுத்திவைக்க நடவடிக்கை எடுக்குமாறு கோருதல்.

★ நெடுந்தீவு மேற்குப் பகுதி மின்சார விஸ்தரிப்புக்கு வழங்கப்பட்ட பத்து லட்சம் ரூபாவை நெடுந்தீவு மத்தி அல்லது கிழக்குப் பகுதிக்கு பயன்படுத்துவது பற்றி உதவி அரச அதிபர் தலைமையில் மூவர் கொண்ட குழு ஒன்றை அமைத்து மின்சாரசபை பிரதிப் பொதுமுகாமையாளருடன் கலந்துரையாடல்.

★ வடபிராந்திய போக்குவரத்துச் சபையால் நடத்தப்பட்டு வரும் நெடுந்தீவுக்கான உள்ளூர் போக்குவரத்து சேவையை நெடுந்தீவு மேற்கு கோட்டைக் காட்டிலிருந்து மாவலித் துறை முகத்துடன் நிறுத்தாமல் நெடுந்தீவு கிழக்கு ஆலமாவனப் பிள்ளையார் ஆலயம்வரை விஸ்தரித்தல்.

★ நெடுந்தீவுப் பிரதேச விவசாய செய்கைக்கு வசதியாகப் பசளையும், உழவு இயந்திரம் ஒன்றும் பெற்றுத்தரப்படவேண்டும். (எ-10-76)

### நாளை

ஆவணி 13
சனிக்கிழமை
(30.08.2003)
திதி : திருதியை
முன்னிரவு 7.28 வரை
நட்சத்திரம் : அத்தம்
பின்னிரவு 3.21 வரை
சுபநேரம் : 3.05 - 4.35
ராகுகாலம்: 09.05-10.35
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

மிகக் கூர்மையாக இருக்காதீர்கள். உங்களையே வெட்டிக்கொள்வீர்கள்.

### கிளிநொச்சி மாவட்டத்தில்

# போதிய கமநல அலுவலர் இல்லை; அபிவிருத்திப் பணிகள் ஸ்தம்பிதம்

கிளிநொச்சி மாவட்டத்தில் கமநல அபிவிருத்து உத்தியோகத்தர்கள் பற்றாக்குறை காரணமாக 'நியாப்' திட்டம் மூலமும் உலக உணவு திட்டத்தின் மூலமும் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களை முன்னெடுத்துச் செல்லமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சி மாவட்டத்தில் எட்டு கமநல கேந்திர நிலையங்கள் இயங்குகின்ற போதிலும் பூநகரி, அக்கராயன் ஆகிய இரண்டு நிலையங்களில் மட்டுமே கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கடமையாற்றி வருகின்றனர் என்றும் -

முழங்காவில், புளியம்பொக்கனை, பளை, கிளிநொச்சி, உருத்திரபுரம், இராமநாதபுரம் ஆகிய ஆறு கமநல கேந்திர நிலையங்களிலேயே கமநல உத்தியோகத்தர் பதவி வெற்றிடமாகவுள்ளது என்றும் - தெரிவிக்கப்பட்டது. (எ)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



உடுவில் மகளிர் கல்லூரி மாணவி

**செல்வி விஜயந்தி சந்திரபாலன்**

சிரேஷ்ட மாணவத் தலைவியாக இருந்து வலைப்பந்து, கூடைப்பந்து, உடற்பயிற்சி ஆகிய விளையாட்டுத்துறைகளில் தலைமை தாங்கியதுடன் வர்த்தகத்துறையில் சகல பாடங்களிலும் அதி விசேட சித்தி (3A) பெற்றுள்ளார். இவரை சக மாணவிகளாகிய நாம் மனதார வாழ்த்துகின்றோம்.

சக மாணவிகள்
உடுவில் மகளிர் கல்லூரி.

(C-29822)(21-11-14)





உ

யாழ்.-அத்தியடி பிள்ளையார் கோயில்

## மணவாளக்கோலமும் விநாயக சதுர்த்தியும்

**நாளை (30.08.2003) சனிக்கிழமை மணவாளக்கோல உற்சவம்:**
காலை 9.00 மணிக்கு அஷ்டோத்திர (108) சங்காபிஷேகத்துடன் பூசைகள ஆரம்பமாகும். மாலை 4.30 மணிக்கு வசந்த மண்டபப்பூசையும் திருவூஞ்சலும் நடைபெற்று எம்பெருமான் அலங்கரிக்கப்பட்ட பூந்தண்டிகையில வீதிவலம் வந்து அருள்பாலிப்பார்.

**31.08.2003 ஞாயிறு விநாயகர் சதுர்த்தி:**
காலை 9.00 மணிக்கு அஷ்டோத்திர (108) சங்காபிஷேகத்துடன் பூசைகள் ஆரம்பமாகும். மாலை 4.30 மணிக்கு வசந்த மண்டபப்பூசையும் திருவிளக்குப்பூசையும் நடைபெற்று எம்பெருமான் வீதி உலா வந்து அருள்பாலிப்பார்.

☞ விளக்குப்பூசை செய்யும் அடியார்கள் முன்கூட்டியே பதிவுசெய்து கொள்ளவும்.

அத்தியடி,
யாழ்ப்பாணம்.

(21912)(21-14-16)

பிள்ளையார் பணியில்
கோயில் நிர்வாகம்.



## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தாய் மடியில்
23 - 06 - 1939



இறைவன் அடியில்
31 - 07 - 2003

### திருமதி இராசமணி நடராஜா

வாழ்வுக்கு இலக்கணமாய் வாழ்ந்த அம்மாவே!
சாவுக்கு இலக்கியமாய் விட்ட தெய்வமே
உம்பாதம் போற்றுகின்றோம் உலகதன் நியதியேற்று
பொன்னடி சேர்ந்தீரே எமைப் புழுவெனத் துடிக்க வைத்தீர்!

எமது அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்தியம் இன்று (29.08.2003) வெள்ளிக்கிழமை மு.ப.11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்மாசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

இல.3, சிவப்பிரகாசம் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
T.P. 071 - 2756491
077 - 6146412

(21934) (26)

கணவர். மக்கள்.
மருமக்கள். பேரப்பிள்ளைகள்.
பூட்டப்பிள்ளைகள்.



## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
07 - 03 - 1919



மறைவு
30 - 07 - 2003

### அமரர் சுப்பிரமணியம் அருளம்பலம்

(இளைப்பாறிய ஆசிரியர்)

அன்போடும் பண்போடும் ஆதரவாய் இருந்தீர்!
முப்பத்தொரு நாளாச்சோ நீர் மறைந்து?
இன்று நாம் உம்மை நினைவு கூர்ந்தே
நித்தமும் நினைந்தே வாடுகின்றோம்.
ஆத்மா சாந்தி அடைய வேண்டுமென
ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சித்திவிநாயகர் கோயிலடி,
அரியாலை.

முளவையன் தோட்டம்,
புலோலி கிழக்கு.

அன்பு மனைவி,
மக்கள், மருமக்கள்.

(21930) (21-14-11)


# நாமஞ் சொல்லுவோம்; நமனை வெல்லுவோம்!

'சொல்லச் சொல்லத் தித்திக்குமே சுந்தரனின் நாமரசம்' என்றபடி இறைவனுடைய நாமத்தை எவ்வளவு தூரம் நாம் பக்தியோடு உச்சரிக்கின்றோமோ அவ்வளவுக்கு அது எல்லையில்லா ஆனந்தத்தை அள்ளித் தந்து கொண்டேயிருக்கும் நெஞ்சினிக்க நாவினிக்க கேட்போர் உள்ளம் இனிக்க இன்பம் பயக்கவல்ல அருமருந்து நாம பஜனை. எனவே, நாமஞ் சொல்லுவோம; நமனை வெல்லுவோம்.

நாங்கள் பஜனை செய்யும் போது இறைவனுக்குக் கிட்டப் போகின்றோம். எல்லோரும் சேர்ந்து பாடும்போது அதற்கு ஒரு தனிச் சக்தி வந்து விடுகின்றது. ஒன்றுசேர்ந்து ஒலிக்கும் போது நாமம் வலிமை பெறுகின்றது. அந்த நாமத்தின் வலிமைக்கு ஈடு இணையே கிடையாது. தனியாக ஒலிக்கின்ற தன்மைக்கும் கூட்டாக ஒலிக்கின்ற தன்மைக்கும் நிறைய வேறுபாடுகளுண்டு. நாம பஜனைக் குரியவலிமை வேறு எதற்குமேயில்லை.

**வலிமை மிக்க நாமம்**

ஒரு கையினால் ஓசை எழுப்புவதிலும் பார்க்க இரண்டு கைகளினாலும் ஓசை எழுப்பும்போது சத்தம்

**ஞானக்கதிர்**

அதிகம்; வெற்றியும் அதிகம். ஆதலினால் எல்லோரும் சேர்ந்து ஒன்றாகப் பிரார்த்திக்கும்போது அது மிகுந்த வலிமை பெறுகின்றது. பஜனையும் கூட்டுப் பிரார்த்தனையும் ஒன்றுதான். பக்தர்கள் எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து ஒருமனதோடு சிவ நாமத்தை உச்சரிக்கும்போது அது உச்சக்கட்டத்தை அடையும்.

**தித்திக்கும் தன்மை வாய்ந்தது**

இறைவன் நமக்கு இந்த உடம்பைத் தந்தது தம்மை வழிபடுவதற்கேயாம். எனவே, வாழ்த்த வாயும நினைக்க மடநெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனை ஏத்தி ஏத்தித் துதிக்க வேண்டியது நமது தலையாய கடனாகும். *"உன் நாமம் என் நாவில் மறந்தறியேன்"* என்று கூறிகின்றார் அப்பரடிகள். இறைவனுடைய நாமம் இனிக்கும் தன்மை வாய்ந்தது. அதைத் தினமும் சொல்லச் சொல்ல எமது உள்ளமானது தூய்மையடையும். அந்தத் தூய்மை வந்தால் தான் உள்ளம் பக்குவமடையும். சிவநாமத்தை உச்சரிப்பதற்கும் பூர்வஜென்ம பலன் வேண்டும். நமது புண்ணிய கைங்கரியத்தினால்தான் சிவநாம உச்சரிப்பு நமக்குக் கிடைக்கும். வாழ்க்கையில் எல்லா நலன்களும் கிடைக்க வேண்டுமாயிருந்தால நாங்கள் சிவநாம பஜனை சொல்ல வேண்டும். இந்த சிவநாம பஜனையினால் மன ஒருமைப்பாடு ஏற்பட்டு இறைவனுக்குக் கிட்டப் போகின்ற வாய்ப்புக்கிடைக்கும்.

**ஆன்மா லயப்படும் இடம்**

சிவபெருமானுடைய அடியவர்களாகிய நாம், அவருடைய நாமத்தை பாடுவதற்கு ஒருபோதும் தயங்கக் கூடாது. "வாயே வாழ்த்துக் கண்டாய்" என்றபடி இறைவன் தந்த வாயினாலே அவனைப் புகழ்ந்து பாடுதல் வேண்டும். அங்ஙனம் பாடப்பாட ஆன்மாலயப்படும். ஆலயம் என்றால் அது ஆன்மா லயப்படும் இடம் என்று கூறப்படுகிறது. உடம்புதான் அழியுமே தவிர உயிர் அழியாது.

*'வேதங்கள் ஐயா என ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே'* என்றபடி காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதும் போதுதான் உள்ளத்திலே தூய்மை உண்டாகின்றது. "உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது" ஆகவே, பூசும் நீறு போல் உள்ளமும் புனிதமாயிருக்க வேண்டும். உள்ளத்திலே தூய்மை இருந்தால் வாக்கினிலே ஒளியுண்டாகும். அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பார்கள். வெள்ளையுள்ளத்திலேதான் கள்ளமிருக்காது. அங்கே தான் இறைவன் குடியிருப்பான்.

**அவனருள் வேண்டும்.**

ஆகவே, மனிதப் பிறவி எடுத்த நாங்கள் அதன் புனிதத் தன்மையை உணர்ந்து செயற்பட நம்மைத் தயார்ப்படுத்திக்கொள்ள வேண்டும். அவ்வாறு தயார்ப்படுத்துவதற்கும் அவனுடைய அருள்தான் வேண்டும். அவன் அருளாலேயே அவன்தாள் வணங்கி உய்தி பெறலாம்.

நல்ல கதியை அடைவதற்கு ஒன்று சேர்ந்து பஜனையும் கூட்டுப்பிரார்த்தனையும் செய்தல் உத்தமம். ஒவ்வொரு நாளும் முடியாவிட்டால் செவ்வாய், வெள்ளியிலாவது பஜனை செய்து உள்ளத்தை ஒருமைப்படுத்தலாம். ஐம்புலன்களையும் அடக்கி ஆண்டவனை வணங்கும் போது அவனருள் நிச்சயம் கிடைக்கும். எனவே, மனம், வாக்கு, காயம் என்ற மூன்றினாலும் இறைவனை நினைத்து பிறவி எடுத்ததன் பலனைப் பெறுவோமாக.

**ஸ்ரீ. நிதர்சன்**

✳

### கசிப்பு வைத்திருந்த வழக்கில்

# தண்டப்பணம் செலுத்தத் தவறியவருக்கு ஒன்றரை வருட கடூழிய சிறைத் தண்டனை

## மல்லாகம் நீதிமன்று விதித்தது

தெல்லிப்பழை,ஓக.29

கசிப்பு வழக்கில் அபராதமாக விதிக்கப்பட்ட பணத்தை உரிய தவணைகளில் செலுத்தத்தவறிய நபருக்கு மல்லாகம் நீதிமன்றினால் ஒன்றரை வருடம் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இளவாலை, முள்ளானையைச் சேர்ந்த வியாகுலம் றஞ்சித் றியூமன் என்பவருக்கே இத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் கடந்த பெப்ரவரி மாதம் மதுவரித்திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்ட இந்நபர் மல்லாகம் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டபோது மன்றினால் 65 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

ஆயினும், இந்நபர் இந்த 6 மாத காலப் பகுதியில் 7 ஆயிரத்து 900 ரூபாவை மட்டுமே அபராதமாகச் செலுத்தியிருந்ததுடன் மிகுதிப் பணத்தைத் தன்னால் செலுத்த முடியாது என்று மன்றில் தெரிவித்திருந்தார்.

இதனை அடுத்து மேற்படி நபருக்கு ஒன்றரை வருட கடூழியச் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளார். மல்லாகம் நீதிமன்ற நீதிபதி திருமதி ச.இளங்கோவன்.

(எ-10-150)

## 'ஹை - ஏஸ்' வான்மோதி குடும்பஸ்தர் படுகாயம்!

கைதடி,ஓக.29

மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தவரை பின்னால் வந்த 'ஹைஏஸ்' வான் மோதியதில் மோட்டார் சைக்கிளில் வந்தவர் இடுப்பிலும், காலிலும் படுகாயம் அடைந்த சம்பவம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மாலை 6.30 மணியளவில் கைதடிச் சந்தியில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் கைதடி மத்தி குமரநகரைச் சேர்ந்த சிதம்பரம் திருஞானசிவம் (வயது53) என்பவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். இவர் செலுத்திச்சென்ற மோட்டார் சைக்கிளும் பலத்த சேதமடைந்தது.(எ-75)


அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ்

## முக்கிய அறிவித்தல்

சமகால அரசியல் விசேட கருத்தரங்கு

தலைவர்:- உயர்திரு. **அ.விநாயகமூர்த்தி** நா.உ.
காலம்:- **31.08.2003 ஞாயிற்றுக்கிழமை**
காலை 9.30 மணிக்கு
இடம்:- **காங்கிரஸ் இல்லம்**
43, 3ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

கட்சி அங்கத்தவர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

உதவிச் செயலாளர்,
ஜீ.ஜீ.பொன்னம்பலம்,
அ.இ.த.கா.

(C/29808) (26-21-14-11)



## மூன்றாவது பிறந்த தின வாழ்த்து

HAPPY BIRTHDAY



"புனிதமஹால்,"
மீசாலை கிழக்கு, மீசாலை.

மீசாலை கிழக்கைச் சேர்ந்த
திரு.திருமதி
**வசந்தகுமார்-புனிதம் தம்பதிகளின்**
அருந்தவப் புதல்வி

### மதுஷாலினி

அவர்கள் தனது மூன்றாவது பிறந்தநாளை நாளை (30.08.2003) சனிக்கிழமை தனது இல்லத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, பெரியண்ணா, சின்னண்ணா, குட்டியண்ணா, அப்பம்மா, அம்மம்மா, ஐயா, ரஜனி அன்ரா, ராஜன் சித்தா மற்றும் மாமாமார், அத்தைமார், சித்தப்பாமார், சித்திமார், மச்சான்மார், மச்சாள்மார் மற்றும் அண்ணாமார், அக்காமார், உற்றார், உறவினர் அனைவரும் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு காலம் நலமுடன் வாழ்க என்று உளமார வாழ்த்துகின்றார்கள்.

- குடும்பத்தினர்.

(21623) (26-21-11-14)

# விளம்பரக் கலையில் நவீன உத்திகள் இன்று அவசியம்

## ரொஹான் விசிதாகம வலியுறுத்து

*கேள்வி:* இளைஞராக இருக்கும் போதே விளம்பரத்துறையில் நுழைந்து பெரும் சாதனை படைத்துள்ளீர்கள். நீங்கள் கடந்து வந்த பாதை பற்றிக் கூறமுடியுமா?

*பதில்:* மொரட்டுவையைப் பிறப்பிடமாகக் கொண்ட நான், மொரட்டுவ புனித செபஸ்தியன் கல்லூரியில் கல்வி பயின்றேன். கல்வி கற்ற பின்னர் கொழும்பு கிளெக்ஸோ கம்பனியில் விற்பனைப்பிரதிநிதியாக தொழில் கிடைத்தது. பின்னர் விற்பனை முகாமையாளராக பதவி உயர்வு பெற்றேன். எட்டு வருடங்களுக்குப் பின்னர் கிரியேஷன்ஸ் விளம்பர நிறுவனத்தை ஆரம்பித்தேன்.

ஆரம்பத்தில் எனது நிறுவனத்தில் என்னுடன் மூன்று பேர் மாத்திரமே தொழில் புரிந்தனர். இன்று எனது நிறுவனத்தில் 150 பேர் தொழில் புரிகின்றனர். இன்று ஒரு கூரையின்கீழ் சகல விதமான விளம்பர வேலைகளையும் மேற்கொள்ளவல்ல சகல வசதிகளையும் கொண்டதாக எனது நிறுவனம் விளங்குகின்றது.

இருப்பினும், தொலைக்காட்சி விளம்பரங்களில் மாத்திரமே எம்மால் செய்ய முடியாதுள்ளது. விரைவில் தொலைக்காட்சி விளம்பரத்துறையிலும் நாம் கால்பதிக்கவுள்ளோம்.

*கேள்வி:* விளம்பரத்துறையில் நீங்கள் பிரவேசிக்க என்ன காரணம்?

*பதில்:* நான் கிளக்ஸோ நிறுவனத்தில் பணியாற்றியபோது பல விளம்பர நிறுவனங்களுடன் தொடர்புகொள்ள வேண்டியிருந்தது.

அப்போது சகல விளம்பர வேலைகளையும் ஒரே இடத்தில் செய்து கொள்ளமுடியாதநிலை இருப்பது தெரியவந்தது.

ஒரே கூரையின்கீழ் சகல விளம்பர வேலைகளையும் செய்துகொள்ள வசதியாக ஒரு விளம்பர நிறுவனத்தை ஆரம்பிக்கவேண்டும் என்ற எண்ணம் அப்போதே எனது மனதில் எழுந்தது.

*கேள்வி:* நீங்கள் கிளக்ஸோ கம்பனியில் விற்பனை முகாமையாளர் பதவியை ராஜினாமாச் செய்தபோது உங்கள் குடும்பத்தினர் எதிர்க்கவில்லையா?

*பதில்:* கிளக்ஸோ நிறுவனத்தில் நியாயமான சம்பளம் எனக்குக் கிடைத்தது. எனவே, நான் ராஜினாமாச் செய்தபோது எனது குடும்பத்தினர் எதிர்புத் தெரிவித்தனர்.

அத்துடன், விளம்பரத்துறையில் போதிய அனுபவம் எனக்கு இல்லாத காரணத்தால் நான் விளம்பர நிறுவனம் ஆரம்பிப்பதை எனது குடும்பத்தினர் விரும்பவில்லை.

ஆயினும், நான் துணிந்து இத் துறையில் பிரவேசித்தேன். இப்போது என் குடும்பத்தினர் எனது துணிச்சலைப் பாராட்டுகின்றனர்.

*கேள்வி:* இத்துறையில் நீங்கள் பிரகாசிக்க உதவியவர்கள் யார்?

*பதில்:* நான் சிறு அளவில் எனது நிறுவனத்தை ஆரம்பித்தேன். வத்தளை செலான் வங்கியின் முதல்மாடியில் எனது நிறுவனம் இயங்கி வந்தது. அப்போது வத்தளை செலான் வங்கியின் முகாமையாளராக இருந்த கெமிலஸ் பெரேரா எனக்குப் பெரிதும் உதவினார். 2001 ஆம் ஆண்டில் நாங்கள் எமக்கென ஒரு விசாலமான கட்டடத்தை நிர்மாணித்துக் கொண்டோம்.

எனது முன்னேற்றத்திற்கு செலான வங்கி பெரிதும் உதவியது.

இன்று எனது விளம்பரங்கள் தயாரிக்கும் வேலைகள் அனைத்தும் எனது நிறுவனத்திலேயே செய்துகொள்ளக்கூடிய வசதிகள் இருக்கின்றன.

- இவ்வாறு கூறினார் ரொஹான் விசிதாகம.

*



ரீ.என்.எல். தொலைக்காட்சி 'நேருக்கு நேர்' நிகழ்ச்சியில் தொழிலதிபர் ரொஹான் விசிதாகமவை அறிவிப்பாளர் சமுதிக சமர விக்ரமவும், 113 கம்பனிகளைக்கொண்ட சிலிங்கோ குறூப்பின் அதிபரும் நிர்வாகப் பணிப்பாளருமான தேசமான்ய லலித் கொத்தலாவலையும் செவ்வி காண்கிறார்கள். இடமிருந்து இரண்டாவதாக மொழி பெயர்ப்பாளர் சட்டத்தரணி க.குணரத்னம் காணப்படுகின்றார்.

**வர்த்தக ஸ்பெஷல்**

ரீ.என்.எல். தொலைக்காட்சியின் வர்த்தக ஸ்பெஸல் நேருக்கு நேர் நிகழ்ச்சியில் கடந்த 26 ஆம் திகதி தோன்றி, தனது தொழில் முன்னேற்றம் பற்றி விளக்கினார் ரொஹான் விசிதாகம.

மொரட்டுவ புனித செபஸ்தியன் கல்லூரியில் கல்வி பயின்று இன்று கிரியேஷன்ஸ் விளம்பர நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளராக இருக்கிறார்.

ரொஹான் விசிதாகம கல்வி பயின்ற காலத்திலேயே கிளெக்ஸோ நிறுவனத்தின் விற்பனைப் பிரதிநிதியாகச் சேர்ந்தார். தொழில்துறையில் தமக்கெனத் தனியான இடத்தைப் பெறவேண்டுமென்ற வேகத்துடன் கிரியேஷன்ஸ் விளம்பர நிறுவனத்தை ஆரம்பித்து அதை வெற்றிகரமாக நடத்தி வருகிறார்.

ரீ.என்.எல். தொலைக்காட்சியில் தொழில் அதிபர் ரொஹான் விசிதாகமவை அறிவிப்பாளர் சமுதிக சமரவிக்ரமவும், 113 கம்பனிகளைக் கொண்ட சிலிங்கோ குறூப்பின் அதிபரும் நிர்வாகப் பணிப்பாளருமான தேசமான்ய லலித் கொத்தலாவலையும் செவ்வி கண்டனர்.

செவ்வியை இங்கே படித்துப் பாருங்கள்.

# கிராம அபிவிருத்தியை மேற்கொள்வதே சனசமூக நிலையங்களின் முக்கிய பணி

## விளையாட்டு விழாவில் அதிகாரி தெரிவிப்பு

வலி.தெற்கு,ஓக.29

சனசமூக நிலையங்களூடாக கிராம அபிவிருத்திப் பணிகளுக்கென உள்ளூராட்சித் திணைக்களத்தால் இவ்வருடம் ஒதுக்கப்பட்டுள்ள நிதியைப் பயன்படுத்தி சனசமூக நிலையங்கள் தத்தம பகுதி அபிவிருத்திகளை மேற்கொள்ள முன்வரவேண்டும் - இதுவே அவற்றின் பிரதான பணியுமாகும்.

வடக்கு - கிழக்கு மாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர் கு.பரமசிவம் மேற்கண்டவாறு கூறினார்.

கந்தரோடை மேற்கு ஞானவைரவர் சனசமூக நிலைய முன்பள்ளி விளையாட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்தியபோது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நிலையத் தலைவர் இமுருகையா தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அபிவிருத்தி உத்தியோகத்தர் குபரமசிவம் தொடர்ந்து கூறியதாவது:-

உள்ளூராட்சித் திணைக்களத்தினால் கிராம அபிவிருத்திப் பணிகளுக்கென ஒதுக்கப்பட்ட பணம் இவ்வருடமுடிவுக்குள் பயன்படுத்தப்படவேண்டும்.

கிராம உள்வீதிகள் அபிவிருத்திக்கு 3 கோடி ரூபாவும் கிராமங்களுக்கான மின்னொட்டல் பணிகளுக்கு இரண்டரைக் கோடி ரூபாவும், சனசமூக நிலையங்களுக்கான நன்கொடை நிதியாக 53 லட்சம் ரூபாவும் இவ்வருடத்துக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

சனசமூக நிலையங்கள் மூலம் சம்பந்தப்பட்ட கிராம அபிவிருத்திப் பணிகள் பலவற்றை மேற்கொள்வது இலகுவானது.

சனசமூக நிலையங்கள் மக்களுடைய - கிராமத்திலுடைய - தேவைகளை இனங்கண்டு, அவற்றை வெளிப்படுத்தவேண்டும். அவற்றைப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

எதிர்கால சந்ததியினராகிய குழந்தைகளின் ஆரம்ப படிவங்கள் ஆழமாகப் போடப்படவேண்டும். கல்வியும் விளையாட்டும் அவர்களை ஆளுமையுடையவர்கள் ஆக்குகின்றன. அவர்களுக்குத் தேவையான பணிகளையும் சனசமூக நிலையங்கள் மேற்கொள்ள வேண்டும் - என்றார்.

(எ-152)

# கால்நடை வளர்ப்பவர்களுக்கென தெற்கில் இருந்து 20 பசுமாடுகள்

## தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கு கிடைக்கும்

வலி.தெற்கு,ஓக.29

யாழ்ப்பாண மாவட்டத்தில் கால்நடை வளர்ப்போர் மற்றும் விவசாயிகளுக்கு வழங்கவென இருபது பசுமாடுகள் திருநெல்வேலி மிருக வைத்திய ஆராச்சி நிறுவனத்துக்கு கொணடுவரப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள கமநல சேவை நிலையங்கள், கால்நடை வைத்தியர் அலுவலகங்களூடாகத் தெரிவுசெய்யப்பட்ட விவசாயிகளுக்கு இம்மாடுகள் வழங்கப்படும் என்றும் -

ஏற்கனவே இதுபோன்ற 28 மாடுகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் -

கமத்தொழில் கால்நடை அபிவிருத்தி அமைச்சின் விலங்கு வேளாண்மைப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் த.கதிர்வேற்பிள்ளை தெரிவித்தார்.

(எ-152)

### 'நியாப்'திட்டத்தின் கீழ் சின்னபூவரசம் குளம் புனரமைப்பு

'நியாப்' திட்டத்தின்கீழ் சின்ன பூவரசம்குளம் புனரமைக்கப்பட்டு வருகிறது.

கடந்த 1997ஆம் ஆண்டு இடம்பெற்ற இராணுவ நடவடிக்கை காரணமாக சேதமுற்ற குளம் தற்போது புனரமைக்கப்பட்டு வருகிறது.

குளம் பலத்த சேதமடைந்திருந்ததை அடுத்து சுமார் 100 ஏக்கருக்கு மேற்பட்ட நெல்வயல்களில் செய்கை மேற்கொள்ள முடியாதநிலை இருந்து வந்தது.



பண்டத்தரிப்பு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் அண்மையில் நடத்திய கூட்டுறவாளர் தின விழாவில் சங்கத்தில் 25 வருடாங்கள் சேவையாற்றிய பத்து பணியாளர்கள் தங்கப் பதக்கம் அணிவிக்கப்பட்டு பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர். இது தொடர்பாக இடம்பெற்ற நிகழ்வில் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டவர்களுடன் கௌரவ, சிறப்பு விருந்தினர்கள், சங்கத் தலைவர் ஆகியோர் இணைந்து எடுத்துக்கொண்ட படம் இது.

(எ-135)

# புங்குடுதீவுப் பொது வைத்தியசாலை ஜனவரி முதல் முழுமையாக இயங்கும்

## சுகாதார பிரதிப் பணிப்பாளர் தகவல்

சண்டிலிப்பாய்,ஓக.29

புங்குடுதீவு அரசினர் வைத்தியசாலைக்கு எதிர்வரும் ஜனவரி மாதத்தில் நிரந்தர வைத்திய அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டு வைத்தியசாலையை முழுமையாக இயக்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

யாழ்.சுகாதாரசேவை பிரதி மாகாண பணிப்பாளர் டாக்டர் கே.ரி. சிவபாதம் இதனைத்தெரிவித்தார்.

தற்போது வேலணை அரசினர் வைத்தியசாலையின் பொறுப்பதிகாரியான டாக்டர், புங்குடுதீவு அரசினர் வைத்தியசாலைக்குச் சென்று வாரத்தில் இரு தினங்கள் அங்குள்ள மக்களுக்கு சிகிச்சையளித்துவருகின்றார்.

இங்குள்ள வார்ட்டுகளும், பிரசவ விடுதியும் கடந்த 15 வருடங்களுக்கு மேலாக இயங்காத நிலையில் இருந்து வருகின்றன.

புங்குடுதீவுப் பகுதியில் மக்கள் தற்போது மீளக்குடியமர்ந்து வருவதால் இந்த வைத்தியசாலையை முழுமையாக இயங்கச்செய்ய வேண்டும் என்றும் -

நிரந்தர வைத்திய அதிகாரி ஒருவரை நியமிக்கவேண்டும் என்றும் - அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்து வந்தனர்.

இதலையடுத்து இந்த வைத்தியசாலைக்கு எதிர்வரும் ஜனவரி மாதத்தில் நிரந்தர வைத்திய அதிகாரி ஒருவரை நியமிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

யாழ்சுகாதாரத் திணைக்களம் பதவியிலிருந்து ஓய்வுபெற்ற வைத்திய அதிகாரிகள் மற்றும் பதிவுபெற்ற வைத்திய அதிகாரிகள் ஆகியோரிடமிருந்து மீள்நியமனம் பெறுவதற்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

மீள்நியமனம் பெறவுள்ள வைத்திய அதிகாரிகள் தற்போது வெற்றிடமாக இருக்கும் இடங்களுக்கு அடுத்த ஆண்டுமுதல் நியமனம் செய்யப்படுவர் - என்றும் சுகாதார பிரதிப்பணிப்பாளர் தெரிவித்தார்.

(எ-135)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### வீடு விற்பனைக்கு

சுண்டுக்குளி, கொழும்புத்துறை வீதியில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, சென்.ஜோன்ஸ் கல்லூரிகளுக்கு அருகில் 51/2 பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: 50/7 (38), கொழும்புத்துறை வீதி, விதானையார் வீதிக்கருகில், சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் (31.08.2003 இற்குப்பின் 01-2360083) (21949)

### வீடு காணி விற்பனைக்கு

கண்டி வீதியில், கைதடி நுணாவிலில் 23 பரப்புக் காணியில் சேதமடைந்த வீட்டுடன் முன்பக்கம் கண்டி வீதியும் மூன்று பக்கமும் ஒழுங்கையால் வரையறுக்கப்பட்டது விற்பனைக்கு உண்டு. (பகுதியாகவும் விற்பனை செய்யப்படும்) தொடர்பு: வே.விக்னேஸ்வரன Thinakkural Rest No. 45, Chetty Street Lane, Nallur. T.P. 222 6476(21873)

### தவறிவிட்டது

மண்டைதீவைச் சேர்ந்த வில்வரெததினம் துஷ்யந்தன் என்பவரின் தே.அ.அ.(830954007V) மண்டைதீவிற்கும் கொக்குவிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் க.சிவராசா, 61/25, மில்லேன், பிரம்படி, கொக்குவில் எனும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.(21943)

23/13, லோட்டஸ் வீதி, வண்ணார் பண்ணையைச் சேர்ந்த மொகமட் சாபீன் சம்ஸி நிகாரா என்பவரின் தே.அ.அ.(526544064V) தட்டாதெருச் சந்திக்கும் லோட்டஸ் வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேலுள்ள முகவரியில் ஒப்படைத்துதவவும். (21931)

### திருமண சேவை

எம்மிடம் வெளிநாட்டு ஸ்பொன்சா மணமக்களின் குறிப்புக்களும் உள்நாட்டு ஆசிரியர், எழுதுவினைஞர், வர்த்தகர்கள், டாக்டர்கள், எச்சினியர்கள், எக்கவுண்டர்கள் மணமக்களின் குறிப்புக்களும் கத்தோலிக்கரினது தகவல்களும் எம்மிடம் உண்டு. I.கல்யாண மாலை திருமண சேவை, 235/7, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். கொழும்பில் கல்யாணமாலை T.P. 338162, Fax 338161 (21858)

---

தெல்லிப்பழை தென்மேற்கு - விழிசிட்டி
அருள்மிகு வீரபத்திரர் ஆலய பரிபாலன சபைப்

## பொதுக்கூட்ட அறிவித்தல்

மேற்படி ஆலய விடயம் சம்பந்தமாகப் பல முக்கிய தீர்மானங்கள் எடுக்க வேண்டியிருப்பதால் 31-08-2003 ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறும் பொதுக் கூட்டத்தில் அனைவரையும் தவறாது சமுகந்தரும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

(21958) (26-21-14-16) பரிபாலனசபை நிர்வாக உறுப்பினர்.

---

## அழைப்புக்கட்டளை

இல.16. பிரிவு 55 (1)

மாவட்ட நீதிமன்றத்தில்
மகேந்திரநாதன் பெண் கல்யாணி,
மயிலங்காடு, சுன்னாகம்.

வழக்கு இல. மணநீக்கம் / 198

வழக்காளி

எதிர்
செல்லர் மகேந்திரநாதன்
ஊரெழு மேற்கு, ஊரெழு
தற்போதைய விலாசம் தெரியாது.

எதிராளி

மேலே பெயர் குறிப்பிட்டுள்ள வழக்காளி இந்நீதிமன்றத்தில் உமக்கெதிராக வழக்குத் தொடர்ந்துள்ளாராதலினால் இதனோடிணைக்கப்பட்டுள்ள பிராதுக்கு உமது மறுமொழி ஏதேனும் இருப்பின், 2003 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 22 ஆம் நாளன்று, அல்லது அதன் முன்னர் நீதிமன்றத்திற் கோப்பிடும்படி இத்தால் நீவிர் தேவைப்படுத்தப்படுவதோடு சொல்லப்பட்ட திகதியன்று அல்லது அதன் முன்னர் நீவிர் மறுமொழி கோப்பிடத்தவறும் சந்தர்ப்பத்தில் வழக்கானது மறு கட்சிக்காரரில்லாமலே மேற்கொண்டு நடத்தப்பட்டு விளங்கப்படுமென அறிந்துகொள்ளுமாறு நீவிர் இத்தால் தேவைப்படுத்தவும் படுகின்றீர்.

பதிவுபெற்ற தரணி மூலம் நீர் தோன்றாவிடில், சட்டமுறையான எல்லா அறிவித்தல்களும் சேர்ப்பிக்கப்படக்கூடிய முகவரியொன்றைக் கூறும் விவரக் குறிப்பொன்றைக் கோப்பிடுமாறு நீவிர் மேலும் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக் கட்டளைப்படி
ம.செல்வரத்தினம்
பதிவாளர் மாவட்ட/நீதிவான் நீதிமன்றம்
பிரதி பிஸ்கால்/சமாதான நீதிவான்
மல்லாகம்.

இ.வசந்தசேனன்
சட்டத்தரணி
வரைவு

குறிப்பு:- விளக்கத்தேதியை நிர்ணயிப்பதற்காக பகிரங்க நீதிமன்றத்தில் இவ்வழக்கு ஏற்படும் திகதி பற்றிய அறிவித்தலை நீவிர் பெற விரும்பினால் பதிவுசெய்யப்பட்ட முகவரியொன்றை இந் நீதிமன்றப் பதிவாளரிடம் கொடுத்துதவுமாறும் பதிவஞ்சல் மூலம் அனுப்பிவைப்பதற்கும் செலவை மேவுவதற்குத் தேவைப்படும் முத்திரைகளைக் கொடுக்குமாறும், 80ஆம் பிரிவின் மூலம் நீவிர் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

கையெப்பம், பதிவாளர்
2003 ஆண்டு ஒகஸ்ட் மாதம் 28ஆம் நாளாகிய இன்று (21960)(21-14-16)

---

### கண்பரிசோதனை முகாம்

யாழ்ப்பாணம்,ஒக.29

யாழ். றோட்டறிக் கழகமும் மானிப்பாய் றோட்டறிக் கழகமும் இணைந்து நடத்தும் இலவச கண்பரிசோதனை முகாம் இன்று காலை 8.30மணிக்கு கச்சேரியடியில் உள்ள யாழ். வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் நடைபெறவுள்ளது.(ம-10)

### ஆலய வசந்தமண்டபத்துக்கு அடிக்கல் நடும் விழா

கல்வியங்காடு ஸ்ரீபத்திரகாளி சமேத ஸ்ரீவீரபத்திரசுவாமி ஆலய வசந்த மண்டபத்துக்கான அடிக்கல் நடும் வைபவம் இன்று நண்பகல் 12மணிக்கு நடைபெறவுள்ளது. இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன் நிகழ்வில் கலந்துகொண்டு அடிக்கல்லை நட்டு வைக்கவுள்ளார்.(ம-10)

---

## வாழ்த்துகின்றோம்

எம்முடன் நீண்ட காலம் பணியாற்றி இலங்கை நிர்வாக சேவைக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ள



திரு.ம.பிரதீபன்



செல்வி க.பிரபா

ஆகிய இருவரையும் வாழ்த்தி நிற்கின்றோம்.

சக உத்தியோகத்தர்கள்.

வலயக் கல்வி அலுவலகம்
யாழ்ப்பாணம். (21957)(21-14-16)

---

## மரண அறிவித்தல்

### தம்பு சிவவடிவேல்

(ஓய்வுபெற்ற சிறைச்சாலை உத்தியோகத்தர்)

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு சிவவடிவேல் அவர்கள் 24-08-2003 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு - சடைச்சி ஆகியோரின் அன்பு மகனும் சின்னத்தம்பி - பாக்கியம் அவர்களின் அன்பு மருமகனும் சறோஜாதேவியின் அன்புக் கணவரும் சுகந்தி, ஜெகரூபன் (கனடா), ஜெகந்தி, சுதர்ணன் (சுவிஸ்), காந்தரூபன் (கிளிநொச்சி), தமயந்தி, காண்டீபன், நிஷாந்தி (சாவகச்சேரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் வசீகரன், காமீம், ஜெயசீலன் ஆகியோரின் அன்பு மாமனாரும் காரீஸ், ஜதீன், வேணிஜா, தனுஜ்ராஜ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30-08-2003) சனிக்கிழமை காலை 10 மணியளவில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
க.ஜெயசீலன்
(மருமகன்)

தாமோதரம்பிள்ளை வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி. (21954)(21-14-19-16)

---


# GANESAN CENTER



(21953) (14-19)



## மங்களகரமான

## திறப்பு விழா

எல்லாவிதமான நவீன ஆடைகள், பட்டுப் புடைவைகள், வேஷ்டிகள் மற்றும் அழகு சாதனப் பொருள்களுக்கு தனித்துவமான வியாபார நிறுவனமாக இணுவில் துரை வீதியில் செயற்பட்டுவரும் கணேசன் சென்ரர் (பௌஸூம் கடை) வாடிக்கையாளர்களின் தேவைக்கேற்ப நவீன வசதிகளுடன் கூடிய புதிய கட்டடத் தொகுதியொன்றை இன்று (29.08.2003) வெள்ளிக்கிழமை காலை 7.30-10.30 மணி வரையிலுள்ள சுபவேளையில் K.K.S. வீதியில் (இணுவில் வைத்தியசாலைக்கு முன்பாக) திறந்துவைக்கப்படவுள்ளது என்பதை வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.



UTHAYAN Graphics

இங்ஙனம்
தங்கள் நல்வரவை நாடும்
**து.சிவகுமாரன்**
கணேசன் சென்ரர், இணுவில்.

# இந்து சமயத்தின் தனித்துவ மேன்மை இகழப்படும் அவலம் தடுக்கப்படுமா?

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்" என்று அருட்பாடலில் குறிப்பிடப்படுவது போன்று இன்று உலகமெங்கும் வியாபித்து விளங்கிக் கொண்டிருக்கின்றது எமது சைவ சமயம்.

இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் மட்டுமன்றி நேபாளம், மொறீசியஸ் போன்ற பல நாடுகளிலும் எழுச்சியுற்றுக் காணப்படுகின்றது இந்துமதம்.

இயற்கை எழில் கொஞ்சும் மருத நிலம், குறிஞ்சிநிலம் போன்ற இடங்களில் அமைதியான சூழலில் சைவாலயங்கள் இருப்பது போன்று உலகில் சனநெரிசல் மிகுந்த நகரங்களான லண்டன், ரொறொன்ரோ போன்ற இடங்களிலும் பல சைவாலயங்கள் தலைநிமிர்ந்துநின்று சைவம் வளர்க்கப்படுகின்றது.

மனிதன் எப்படியும் வாழலாம் என்றில்லாமல் இப்படித்தான் வாழ வேண்டும் என்ற வரையறைக்குள் நின்று வழிகாட்டுவது சைவசமயம்.

இயறகை வடிவிலே இறைவனைக் காண்கின்ற சமயம் சைவசமயம். அன்று சிக்காகோ மாநாட்டில் இந்து சமயத்தின் மேன்மையை உலகத்துக்கு அறிவித்தார் சுவாமி விவேகானந்தர்.

இறைவனின் அனுக்கிரகம் பெற்ற சைவகுரவர்களாகிய நாயன்மார்களினால் பாடப்பெற்ற தேவார, திருவாசகங்கள், திருப்பதிகங்கள் சைவசமயத்தவர்களின் வாழ்வுக்கு வழிகாட்டுகின்றன.




இந்து மதத்தில் கூறப்படுகின்ற புனிதமான ஆத்மீக நெறியானது மேலைத்தேசத்து மக்கள் பலரையும் ஆட்கொண்டிருக்கின்றது என்பது உலகறிந்த விடயம். உதாரணமாக அமெரிக்க நாட்டைச் சேர்ந்த சுவாமி தந்திரதேவ மகராஜ் இந்து மதத்தின் ஆத்மீக நெறியில் நாட்டம்கொண்டு, காவியுடை தரித்து திருகோணமலையில் ஆசிரமம் அமைத்து தேவார, திருவாசகங்களின் பொழிப்புரைகளை அழகு தமிழில் சிறுபிள்ளைகளுக்கு விளக்கிக்கூறுகின்ற புனிதமான பணியைச் செய்துகொண்டிருக்கின்றார்.

சைவசமயத்தின் தத்துவங்களைக் கூறுகின்ற நூல்களில் ஒன்றாகிய "சைவ சித்தாந்தம்" பிற மதத்தைச் சேர்ந்த கல்விமான்களினாலும் பல் கலைக்கழகங்களில் ஆய்விற்குட் படுத்தப்பட்ட பெருமையைப் பெறுகின்றது.

ஆகவே, தற்காலத்தில் சைவ சமயத்தின் மேன்மையானது அகிலமெங்கும் பிரகாசித்துக்கொண்டிருக்கின்றது என்பதில் சிறிதேனும் ஐயமில்லை.


### யாழ்ப்பாணமும் சைவசமயமும்

தமிழ் மொழியையும் சைவசமயத்தையும் அவற்றுக்கேயுரித்தான கலாசார பண்பாட்டு இயல்புகள் குன்றாத வகையில் வளர்த்த பெருமைக்குரிய மண் யாழ்ப்பாண மண் ஆகும்.

அந்நியராட்சிக் காலத்தில் சைவாலயங்கள் இடிக்கப்பட்டு சைவசமயம் அடிமைத்தளையினுள் சிக்கிக் கொண்டிருந்த காலத்தில், நல்லை நகர்ஆறுமுகநாவலர் அவர்கள் சைவ சமயத்தையும் தமிழ் மொழியையும் வீழ்ச்சியில் இருந்து காப்பாற்றி மீண்டும் மேன்மையுறச் செய்தார்.

அத்துடன், கடந்த கால யுத்த அனர்த்தங்களின்போது யாழ். குடாநாட்டுக் கிராமங்களில் வாழும் ஏழை மக்களின் வறுமை நிலையைச் சாதகமாகப் பயன்படுத்தி அரைக்கிலோ அரிசிக்கும் கால்கிலோ பருப்புக்கும் எமது சைவசமயம் பேரம் பேசப்பட்ட நிலையும் யாழ். மண்ணில் நடைபெற்றிருக்கின்றது.

பட்டினி கிடந்து பசியால் மெலிந்து பாழ்பட நேர்ந்தாலும் இறக்கும்போது சைவசமயத்தவர்களாகவே இறப்போம்" என்ற உறுதியுடன் செயற்



பட்ட குடாநாட்டுக் கிராமங்களில் வாழும ஏழைச் சைவமக்களை யாழ். மண்ணில் சைவசமய வரலாறு என்றும் மறந்துவிட முடியாது.

ஆகவே, யாழ் மண்ணுடன் இரண்டறக் கலந்துவிட்ட சைவசமயத்தை ஒருபோதும் பிரிக்கமுடியாது என்பதை வரலாறு நன்கு உணர்த்தியுள்ளது. ஆனால், இவ்வாறு பல முனைப் போராட்டங்களின் ஊடாக எழுச்சியுற்ற சைவசமயத்தின் மேன்மையானது தற்காலத்தில் யாழ். குடாநாட்டில் பேணிக்காக்கப்படுகின்றதா என்பது கேள்விக்குரிய விடயமே என்பதை நாம் விரும்பியோ, விரும்பாமலோ ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

### சைவாலயங்கள்

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது தமிழ்ப் பொன்மொழி "அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது" என்று ஔவையார் பாடியதுபோன்று "அரிது அரிது அமைதியான சைவாலயங்களைக் காண்பது அரிது" என்ற நிலையே தற்காலத்தில் கூடுதலாகக் காணப்படுகின்றது.

**வடகோவை சிவநேசராசன்**

"நான் பெரிது, நீ சிறிது" என்ற விதண்டா வாதங்கள் வளர்ச்சி அடைந்து, கடவுள் யாருக்குச் சொந்தம என்ற நிலையில் நீதிமன்றப் படியேறி வழக்காடுகின்ற சைவாலயங்களே கூடுதலாகக் காணப்படுகின்றன.

அமைதியைப் பேணவேண்டிய ஆலயங்கள் சில சந்தர்ப்பங்களில் சமர்க்களங்களாக மாறுகின்றன.

ஊரின் நடுவே அமைந்திருந்த கோயில்கள் காரணமாக சமூக ஒற்றுமை பேணப்பட்ட அந்தக்காலம் ஆலயப் பிரச்சினைகள் காரணமாக இரத்த உறவுகள் பிளவுபட்டிருப்பது இந்தக் காலம். "குளிக்கப் போய்ச் சேறு பூசும் நிலையில் மாற்றம் வருமா?"

சமூக ஒற்றுமையைக் குலைக்கின்ற சைவாலயப் பிரச்சினைகள் அடுத்த சந்ததிக்கும் கையளிக்கப்படுமா?

### சைவ ஆலயங்களில் மிருகபலிகள்

கொலை, களவு போன்ற பஞ்சமா பாதகங்களைச் செய்யக்கூடாது என்பதனைத் திடமாக வலியுறுத்துகின்ற சமயம் எமது சைவசமயம்.

ஆனால், அண்மையில் வலிகாமம் பகுதியில் உள்ள சைவாலயம் ஒன்றில் எண்ணூறு ஆட்டுக்கடாக்கள் பலியிடப்பட்டதாக பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்துமத வளர்ச்சியில் அக்கறையுள்ள பலபொது அமைப்புக்கள் குடாநாட்டில் இயங்கிக் கொண்டிருந்த போதிலும் சில ஆலயங்களில் நிகழும் மிருகபலிகள் தொடர்பாக மறுப்பு அறிக்கை எதுவும் தெரிவிக்காது மௌனம் சாதித்தமை மிகவும் கவலைக்குரிய விடயமே. மௌனம் சம்மதத்தின் அறிகுறியாகவும் இருக்கலாம்.

புதையல் பெறுவதற்காக குழந்தைகளை நரபலி கொடுத்தல், கணவன் இறந்தபின் மனைவியை உடன் கட்டை ஏற்றுதல், தேர்தலில் அரசியல் வாதிகள் தோற்றால் ஆதரவாளர்கள் தமக்குத் தாமே தீ மூட்டித் தற்கொலை செய்தல், சினிமா நடிகைகளுக்குக் கோயில்கட்டிப் பூசை செய்தல் போன்ற பகுத்தறிவற்ற செயற்பாடுகளுள் சைவாலயங்களில் மிருகபலிச் செயற்பாடுகளும் அடக்கப்படுகின்றன என்பதை சைவசமயத்தவர்கள் என்று போலி வேடம் தரித்த சில பழமைவாதிகள் அறியாமல் இருப்பது மனவேதனைக்குரிய விடயமே.

### சைவாலயங்களின் சமூகத் தொண்டு

விரல்விட்டு எண்ணக்கூடிய ஓரிரண்டு சைவாலயங்கள் மட்டும் சமயத் தொண்டுடன் சமூகத் தொண்டையும் இணைத்து முன்மாதிரியாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

ஏனைய பெரும்பான்மையான சைவாலயங்களில் சமயத் தொண்டுக்கும் சமூகத்தொண்டுக்கும் இடையே நீண்டதொரு வெற்றிடம் காணப்படுகின்றமையை நாம் நன்கு அவதானிக்கலாம்.

கடந்த கால யுத்த அனர்த்தங்களின்போது கொடிய வறுமையால் வாடிய கிராமப்புறத்து ஏழைச் சைவ மக்களிடம் சைவசமயத்தின் மேன்மையானது அரைக்கிலோ அரிசிக்குப் பேரம் பேசப்பட்டதற்குப் பிரதான காரணம் சைவாலங்களின் சமூகத் தொண்டு பின்னடைவாகவுள்ளதே என்பது யாரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாத உண்மை ஆகும்.

### திருவிழாக்கள்

*"பரம்பொருளின் பெரும்புகழைப் பாடி*
*பணிதலன்றிப் பிறவார்த்தை*
*யாதொன்றும்*
*பேசற்க ஆலயத்துள்"*

என்ற வாசகம் பெரும்பான்மையான சைவாலயச் சுவர்களில் காணப்படுகிறது.

ஆனால், உண்மையில் நடப்பது என்ன? திருவிழாக்காலங்களில் ஆலயச் சூழலானது புனிதத் தன்மையிழந்து களியாட்ட, கேளிக்கைக்குரிய இடமாக மாற்றப்படுகின்றது.

குளிக்கப்போய்ச் சேறுபூசும் நிலை கூடுதலாகக் காணப்படுகின்றது.

மேலைத்தேச மக்களாலும் போற்றப்படுகின்ற சைவ சமயத்தின் மேன்மையானது இகழப்படும் அவல நிலையே ஏற்படுகின்றது.

சைவசமயத்தவர்களுக்கே உரித்தான கலாசாரப் பண்பாடுகள் நடை, உடை பாவனைமூலம் ஏளனம் செய்யப்படுகின்றன.

சைவசமயத்தின் மேன்மையை பேணிக் காக்கவேண்டிய இன்றைய இளம் சமுதாயமே சில சந்தர்ப்பங்களில் சைவசமயத்துப் பாரம்பரியத்துக்கு ஒவ்வாத உடையணிந்தும் ஆலயச் சூழலை நண்பர்கள் கூடிக்கும் மாளம் அடிக்கும் கேளிக்கைக்குரிய இடமாக மாற்றுவதும் மிகவும் கவலைக்குரிய விடயமே.

ஆகவே, இனியாவது சைவசமயத்தின் மேன்மை பேணிக்காக்கப்படுமா? ✳

## கல்விச்சாலைக் காட்சிகள்



கோப்பாய் மகா வித்தியாலய் பழையமாணவா சங்கத்தினால் அண்மையில் நடத்தப்பட்ட முத்தமிழ்விழாவின்போது லண்டனில் வசிக்கும் திருமதி ஸ்கந்ததேவன் கமலாதேவி மாணவன் ஒருவனுக்கு காலணி வழங்குவதைப் படத்தில் காணலாம்.

அருகில் பாடசாலை உப அதிபர் திருமதி த.திருக்குமரன் காணப்படுகின்றார். (எ-180)



கோப்பாய் ஆசிரிய கலாசாலை வாசலில் ஆசிரிய மாணவன் செ. செந்தில்வேலால் உருவாக்கம்பெற்ற சரஸ்வதி சிலை திறப்புவிழா அண்மையில் நடைபெற்றது.

கலாசாலையின் பழைய மாணவர்களில் ஒருவரான கோப்பாய் க.இ.குமாரசாமி மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைப்பதை படத்தில் காணலாம். அதிபர் ஆ.சிறீஸ்கந்தமூர்த்தி, கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். (எ-152)



ஆனைக்கோட்டை அமெரிக்க மிஷன் த.க.வித்தியாலயத்திற்கு மின்சாரம் வழங்கும் வைபவம் அதிபர் எஸ்.நாகையா தலைமையில் அண்மையில் நடைபெற்றபோது யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவீராஜ் மின் இணைப்பை ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம். அருகில் முன்னாள் அதிபர் ந.சிவபாதம் காணப்படுகிறார். (எ-135)



மட்டுவில் கமலாசனி வித்தியாலய புதிய கட்டட நிர்மாணத்திற்கான அடிக்கல்லை சாவகச்சேரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் நா.சத்தியநாதன் நட்டு வைப்பதைப் படத்தில் காணலாம்.

வலயக் கல்விப் பணிமனையைச் சேர்ந்த பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி கிருபா வீரசிங்கம், அதிபர் செ.பேரின்பநாதன், ஓய்வுபெற்ற கோட்டக் கல்விப் பணிப்பாளர் கி.கணேசன் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். (எ-31)

# பிரதான கணனி....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தேவை. இது விடயத்தில் இன்று இயங்கிவரும் இணையப் பல்கலைக் கழகம் மகத்தான பணியை ஆற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

இலங்கை நாடாளுமன்றத்தில் நான் பிரதிநிதித்துவப்படுத்தும் இலங்கை வாழ் 15இலட்சம் இந்திய வம்சாவளி தமிழர் கடந்த 17 தசாப் தங்களுக்கு மேலாக இலங்கையில் வாழ்ந்து வருகிறார்கள்.

எமது மக்கள் தமிழ்மொழியையே பயிற்று மொழியாகக் கொண்டுள்ளனர். பாடசாலைக் கல்வி முழுவதையும் தமிழ்மொழியிலேயே அவர்கள் பயிலுகின்றனர். இந்நிலையில் கல்வித துறையில் அவர்கள் இன்னும் பின் தங்கியவர்களாகவே உள்ளனர்.

தெற்காசியப் பிராந்தியத்தில் இலங்கை பாடசாலைக் கல்வியில் பல சாதனைகளைப் புரிந்தாலும் இலங கையின் கல்வி வசதிகள் எமது மக்களை முற்றாகச் சென்றடையவில்லை.

எமது மக்களின் சராசரிக் தராதரம் ஆரம்பக் கல்விய[illegible] உள்ளது. உயர்கல்வித் துறையில் எமது மக்கள் பெரிதும் பின்னடைந்து காணப்படுகின்றனர்.

எமது மக்களுக்கும் இலங்கையில் வாழும் ஏனைய பிரிவு மக்களுக்குமிடையில் கல்வி மட்டத்தில் காணப்படும் பாரிய இடைவெளியைக் குறைக்கும் முயற்சியில் எமது சமூக அபிவிருத்தி அமைச்சு பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

இக்கல்வி இடைவெளியைக் குறைப்பதற்கு நவீன தகவல் தொழில் நுட்பத்தில் கணனியை எவ்வாறு பயன் படுத்தலாம் என்பது பற்றி நாம் சிந் தித்து வருகிறோம்.

- இவ்வாறு அமைச்சர் சந்திர சேகரன் தெரிவித்தார்.

**G.A.Q. 2003, 2004**
**யாழ்., பேராதனை**

பதிவுகள் எமது நிறுவனத்தால் செய்துதரப்படும்.

G.A.Q, B.A I,II
2004 Paper & Day Class

அரசியல்: பொன்.சந்துரு
நாடக அரங்கியல்: I.சத்தியா
புவியியல்: K.கிரிதரன்
தமிழ்: க.தர்மராஜா

ஆரம்பம: 30.08.03 சனி 8 a.m.

**நியூட்டன்**
ஆரியகுளம் சந்தி - யாழ்நகர்.
(21945)

**கோழித்தீன் விற்பனைக்கு**

பிரிமா கோழித்தீன் விற்பனைக் குண்டு. அத்துடன் ஏனைய கால் நடைத்தீனும் விற்பனைக்குண்டு.

**S.K.Agency**
No.128D,ManipayRoad,
(21974) (32) Jaffna.

**வேலை ஆள்கள் தேவை**

எமது தொழில் நிலையத்துக்கு **புத்தகம் கட்டுபவர்கள்,** பழகுபவர்கள், SCREEN PRINTING தெரிந்தவர்கள், பழகுபவர்கள் உடன் தேவை.

காலை 9.00 மணி தொடக்கம் 10.30 மணிவரை நேரில் வரவும்.

**போஸ்கோ நிறக்கலை அச்சகம்**
**BOASCO ARTONE PRINTERS**
இல.252, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(C/29834)(12-18)

**கண்ணீர் அஞ்சலி**

யா/புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில்
முகாமைத்துவ உதவியாளராகப் பணியாற்றும்
இரத்தினம் கிருஷ்ணகுமாரின்
அன்புத் தந்தையார்

**அமரர் நாகமுத்து இரத்தினம்**
(CHAIRMAN இரத்தினம்)

அவர்கள் 19-08-2003 அன்று புதிய கொலனி, மாங்குளத்தில் காலமானார். அவரின் பிரிவினால் துயருறும் உற்றார், உறவினர், நண்பர்களுக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து, அவருடைய ஆன்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/புங்குடுதீவு மகாவித்தியாலயம்,
புங்குடுதீவு.

(21968) (32-12-18)

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஓக.29

கல்வயல் பழம்தோட்டம் ஞான வைரவர் ஆலய வருடாந்த உற்சவம் இன்று காலை 10 மணிக்கு அபிஷேகத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. (ம-10)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஓக.29

ஈவினை மத்தி அருள்மிகு ஸ்ரீ கற்பக விநாயகர் திருக்கோவில் வருடாந்த மஹோற்சவம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பதினொரு தினங்கள் நடைபெறும்.

அடுத்த மாதம் 9ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் புதன் கிழமை காலை 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

(எ-69)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஓக.29

மீசாலை, இலந்தைக்கூடல் வீர கத்திப் பிள்ளையார் ஆலய மகா கும்பாபிஷேகம் இன்று காலை 6.10 மணி தொடக்கம் 7.10 மணி வரையிலான சுபவேளையில் இடம்பெறவுள்ளது.

(எ-10)

**தொலைபேசி விற்பனைக்கு**

மோட்டறோலா தொலைபேசி சோலருடன் உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு:
070 212297
(21970) (32)

**வேலையாள்கள் தேவை**

யானைமார்க் சோடாப்பெட்டிகளை இறக்க ஏற்றுவதற்கான கூலி ஆள்கள் தேவை.
உடன் தொடர்புகொள்ளவும்.

**பிள்ளையார் ஸ்ரோர்ஸ்,**
**31.மானிப்பாய் வீதி,**
**யாழ்ப்பாணம்**(21971)

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், ஆஸ்பத்திரி வீதியில் பெரியாஸ்பத்திரிக்கு முன்னால் 14.78 குழியில் அமைந்துள்ள மாடி வீடொன்றும் அதனுடன் இணைந்த 11.72 குழியில் அமைந்துள்ள வீடு ஒன்றும் தனித்தனியாகவோ அல்லது ஒன்றாகவோ விற்பனைக்கு உண்டு. வியாபாரத்திற்கு/காரியாலயத்துக்கு வசதியான இடம்.

தொடர்பு: 077- 6157750 (21972)

# குருநகரில் கரையொதுங்கிய படகு பொலீஸாரால் மீட்பு!

யாழ்ப்பாணம்,ஓக.29

குருநகர் கடற்கரையில கைவிடப்பட்ட நிலையில் கரையொதுங்கிய படகு ஒன்று யாழ் பொலீஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் காலை கடற்தொழிலுக்குச் சென்று திரும்பிய மீனவர்கள், இச்சம்பவம் தொடர்பாக யாழ். பொலீஸாருக்கு தெரிவித்ததையடுத்தே இப்படகு மீட்கப்பட்டதாக யாழ்.பொலீஸ் நிலைய குற்றவியல் பொலீஸ் அதிகாரி ராஜபக்ஷ தெரிவித்தார்.

படகிலிருந்து இயந்திரம் மற்றும் இரண்டு மண்ணெண்ணெய் கான்கள் ஆகியன பொலீஸாரால மீட்கப்பட்டுள்ளன. இப்படகின் உரிமையாளர்கள் பொலீஸ்நிலையத்திற்கு வந்து தகுந்த ஆதாரம் காட்டி அதனைப் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(ம-ரி)

# ஜனக பண்டார எம்.பி. பிணையில் விடுவிப்பு

கொழும்பு,ஓக.29

மாத்தளை மாவட்ட பொ.ஐ.முன்னணி எம்.பி. ஜனக பண்டார தென்னக்கோன், கொழும்பு மேலதிக மாவட்ட நீதிவான் சரத் சந்திரசிறி கருணாரத்னவினால் ஒரு லட்சம்ரூபா சரீரப்பிணையில் நேற்றுமுன்தினம் விடுவிக்கப்பட்டார்.

தென்னக்கோன் சிகிச்சை பெற்று வரும் தனியார் வைத்தியசாலைக்குச் சென்று நீதிவான் அவரது உடல் நிலை குறித்து ஆராய்ந்ததை அடுத்தே பிணை வழங்கினார்.

தம்புள்ள நீதிமன்ற நீதிவானால் பிறப்பிக்கப்பட்ட விளக்கமறியல் உத்தரவின் பேரில் அவர் சிகிச்சை பெற்று வந்த வைத்தியசாலையிலேயே சிறைச்சாலை காவலர்களின் காவலில் இருந்து வந்தார்.

**JKI John Keells INSTITUTE**

**Globally recognized**
JOHN KEELLS
BTEC HIGHER NATIONAL DIPLOMA IN COMPUTING
**Leading to a BSc. (Hons) degree .....**
Now offered in Jaffna....

- Awarded by Edexcel international UK
- Equivalent to the 1st two years of an International B.Sc. (Hons) degree.
- Final year entry in to University degree programmes around the world.
- Individual attention (Only 20 students per batch)
- International course curriculum
- Expert multinational faculty.
- Learning model
- Lending, reference Library and Internet facilities
- Over 1000hrs of guided learning.
- Excellent infrastructure (A/C lecture halls, labsetc)
- Unlimited practical hrs.
- Focus on Job oriented soft skills.
- Industrial placements.

Only 40 students will have the opportunity this year.

**1st Batch**
**Commences on 12th September 2003**

For more information,
**Call now on 222 2831 or**
visit us at John Keells Institute - Jaffna Centre
100, Clock Tower Road,
Jaffna.

(C29832) (32)

**திறப்பு விழா**
**ஆரோக்கிய டயக்னோஸ்ரிக் சென்ரர்**
**AAROKIYA DIAGNOSTIC CENTER**

இன்று (29.08.2003) வெள்ளிக்கிழமை பி.ப. 3.00 மணியளவில் வடமராட்சியில் முதன் முதலாக X - Ray பிரிவு திறந்துவைக்கப்படவுள்ளது.



**சேவைகள்**
X-Ray (X–கதிர் பரிசோதனை)
Path - Lab (ஆய்வுகூட பரிசோதனை)
ECG (இதயத்துடிப்புப் பரிசோதனை)

**இடம்:**
பிள்ளையார் கோவிலடி,
மத்திய மகா வித்தியாலய வீதி,
நெல்லியடி.

(21975) (32-12-18)

**இலங்கை மின்சார சபை- யாழ்ப்பாணம்**
**வீடு வாடகைக்குத் தேவை**

இலங்கை மின்சார சபையின் சாவகச்சேரி மின்பாவனையாளர் சேவைநிலையப் பாவனைக்கு சாவகச்சேரி நகரை அண்டிய பகுதியில் பஸ் நிலையத்திலிருந்து 1/2 கி.மீற்றருக்கு உட்பட்டதாக கீழ்வரும் வசதிகளுடன் வீடொன்று உடனடியாக வாடகைக்குத் தேவைப்படுகின்றது. கண்டி வீதியில் அமைந்துள்ள வீடுகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(1) தளப்பரப்பு 2000 சதுர அடி.
(2) வாகனம் நிறுத்துமிட வசதி.
(3) கிணறு, கழிப்பிட வசதி.
(4) வீடு அமைந்திருக்கும் காணி 4பரப்புக்குக் குறையாமல் இருத்தல்வேண்டும்.

வீடு சம்பந்தமான சகல விவரங்கள், மாதாந்த வாடகை, வீடு அமைந்துள்ள இடம், வீட்டின் மொத்தப்பரப்பளவு போன்ற விவரங்களை 15.09.2003, 2.00 மணிக்கு முன்னர் பதிவுத் தபால்மூலம்

**மின் பொறியியலாளர்,**
**யாழ் பிரதேச அலுவலகம்,**
**இலங்கை மின்சார சபை,**
**சுன்னாகம்.**

என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "வீடு வாடகை" என குறிப்பிடவும்.

"சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கைகொடுக்கும்"
இலங்கை மின்சார சபை.

(C/29833) (12-18)

### வவுனியாக்குளம் மாசடைகிறது

வவுனியா மாவட்டத்திற்கு ஆதாரமாக விளங்கும் வவுனியாக்குளம் தற்போது மாசடைந்து சிதைந்து வருகிறது. வவுனியா நகரம், வவுனியாக்குளத்தை மையப்படுத்தியே எழுந்தது என்பதால் இது பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ம)

# அடையாளம் காணப்படாத சடலங்களை அரச செலவில் அடக்கம் செய்ய உத்தரவு

பிந்துனுவெவ தடுப்பு முகாமில் வைத்து படுகொலைசெய்யப்பட்ட 37 இளைஞர்களில், அடையாளம் காணப்படாமல் பண்டாரவளை வைத்திய சாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்த 10 சடலங்களையும் அரச செலவில் அடக்கம் செய்யும்படி கொழும்பு மேல்நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

மிகுதி 27 பேரின் சடலங்கள் அடையாளம் காணப்பட்டு அவர்களது உறவினர்களிடம் முன்னரே ஒப்படைக்கப்பட்டன.

10 பேரின் சடலங்கள் இன்னமும் அடையாளம் காணப்படவில்லை.

நேற்று நீதிமன்றத்தில் பொலீஸார் இந்த விவரங்களை நீதிபதிகளிடம் தெரிவித்தனர்.

இதனையடுத்து, நீதிபதிகள் சடலங்களை அரச செலவில் அடக்கம் செய்யும்படி உத்தரவிட்டனர்.

## முக்கிய அறிவித்தல்

**நாதன் வைத்தியசாலை, உடுப்பிட்டி**

**தவிர்க்க முடியாத காரணத்தால் 30 ஆம் திகதி சனிக்கிழமை முதல் மறு அறிவித்தல் வரை வைத்தியசாலை மூடப்பட்டிருக்கும்.**

தகவல்:
வைத்திய கலாநிதி
ஸ்ரீ .சிவசம்பு
(21978) (29-12-18)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக ஆசிரியை செல்வி க.வைதேகி அவர்களின் அன்புத் தாயாரான **திருமதி கணநாதன் சரஸ்வதி** அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கு கொள்வதோடு, எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்து அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

-நான்காம் அணியினர்.
வவுனியா தேசியக் கல்வியியற் கல்லூரி.
(21978)

## மரண அறிவித்தல்கள்

### பொன்னுத்துரை சுப்பிரமணியம் (செட்டியார்)

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் நாச்சிமார் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை சுப்பிரமணியம் நேற்று (28.08.2003) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி மற்றும் திருமதி தம்பிராசா நாகம்மா ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (29.08.2003) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் 4மணியளவில் தகனக் கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*3/22, கேசாவில் பிள்ளையார் வீதி,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.*
(21984) (29-12-18)
தகவல்:
தம்பிராசா நாகம்மா
(சகோதரி)

### முத்துதம்பி தங்கரத்தினம் (சரஸ்வதி)

கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முத்துதம்பி தங்கரத்தினம் (சரஸ்வதி) நேற்றுமுன்தினம் (27.08.03) புதன்கிழமை காலமானார்.

கொக்குவில் கிழக்கு காலஞ்சென்ற செல்லையா - சின்னம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்ற கறுத்தப்பிள்ளை அம்பலவானரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற முத்துத்தம்பியின் அன்பு மனைவியும் தவமணி (இந்தியா), யோகேந்திரராசா (இந்தியா), காலஞ்சென்ற சிலோசனாதேவி, றேனுகாதேவி, நிறஞ்சனாதேவி, காலஞ்சென்ற தயாவதி, சாந்தரூபன் (கனடா), தவரூபன் (ஜேர்மனி), காந்தரூபன் ஆகியோரின் அன்புத் தாயாரும் பத்மநாதன் (இந்தியா), லோகேஸ்வரி (இந்தியா), ஸ்ரீ .அருட்செல்வம் (ஓய்வுபெற்ற தொழில் நுட்ப உத்தியோகத்தர்), இரகுநாதன், புனிதவதி (கனடா), யோகஸ்ரீ (ஜேர்மனி), தர்மினி ஆகியோரின் அன்பு மாமியும் மனோன்மணி, காலஞ்சென்ற தம்பிராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிவானந்தன், பவானந்தன், யோகசறோயினி, மல்லிகாதேவி, பத்மா, தவச்செல்வம், காலஞ்சென்ற சஜீவன், சஞ்சீவன், ஜனனி, நிவேத்தா, விதுஷா, பிரகாஷ், பிரவிண்ணா, பிரதீபா, ராஜி, இந்து, ஐங்கரன், காயத்திரி, விதூன் (கனடா), சயன் (கனடா), சதுன் (கனடா), சயந்தி (கனடா), ராகுல் (ஜேர்மனி), திலச்சி, தர்சன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 28.08.2003 வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கோணாவளை ஒழுங்கை,*
*கொக்குவில் கிழக்கு.*
*021 222 6058*
(U 29837)
தகவல்:
மு. தவரூபன்
(மகன் - ஜேர்மனி)

### திருமதி செல்லம்மா தம்பிஜயா (இணுவில் மேற்கு)

இணுவில் மேற்கைச் சேர்ந்த திருமதி செல்லம்மா தம்பிஜயா நேற்று (28.08.2003) வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் அமரர் தம்பிஜயாவின் அன்பு மனைவியும் கந்தசாமி, (கூட்டுறவு உதவி ஆணையாளர், கிளிநொச்சி), முருகையா (எழுதுநர், பிரதேச செயலகம், உடுவில்), பரமேஸ்வரன் (பரமேஸ்வரன் ஸ்ரோர், இணுவில்), திருமதி மகாலட்சுமி, திருமதி கனகலட்சுமி, திருமதி நிர்மலாதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும் கிருபைநாதன் (இளைப்பாறிய நில அளவை உதவியாளர்), குணநேசன் (அம்பிகா ஸ்ரோர்ஸ், கிளிநொச்சி), கிருபானந்தன் (K.R.M மில் உரிமையாளர்), திருமதி தவஅருட்கரசி, திருமதி சந்திராதேவி, திருமதி தயாநிதி ஆகியோரின் அன்பு மாமியாரும் அஜந்தன், ஜனனி, யோகிதா, ஜசிந்தா, உமாகரன், நிரோசா,அரவிந்தன், திரிசிகா, துளசிகா, அனோஜன், கேதீசன், கோசலா, அம்சனா, அருள்க்குமரன், தணிகைக்குமரன், திவ்யா, லோஜன், பவித்தா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அமரர்களான சின்னம்மா, ஆறுப்பிள்ளை, தம்பிஜயா ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.08.2003) வெள்ளிக்கிழமை 12 மணியளவில் அவரின் இல்லதில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இணுவில்மேற்கு.*
(21981) (12-18-29)
தகவல்:
த.கந்தசாமி, த.முருகையா,
த.பரமேஸ்வரன்
(பிள்ளைகள்).

### நல்லூரிலிருந்து திரும்பிக்கொண்டிருந்த பெண்ணிடம் கொள்ளை!

யாழ்ப்பாணம்,ஓக.29

நல்லூர் சப்பறத் திருவிழா முடிந்து வீடு திரும்பிக்கொண்டிருந்த குடும்பப் பெண்ணைத் தாக்கி, அவர் அணிந்திருந்த நகைகளை சிலர் கொள்ளையடித்துச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த திங்கட்கிழமை மாலை கச்சேரி-நல்லூர் வீதி மற்றும் நல்லூர் குறுக்கு வீதி ஆகியவற்றை இணைக்கும் வீதியில் ஆள் நடமாட்டம் குறைந்திருந்த சமயம் இடம் பெற்ற இச்சம்பவத்தில் அரியாலையைச்சேர்ந்த குடும்பப் பெண் ஒருவரே தனது நகைகளை பறிகொடுத்தவராவார்.

இதுதொடர்பாக யாழ்.பொலீஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டில் 5பவுண் சங்கிலி மற்றும் காப்புகள் அபகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.


துரித விற்பனையில்
VCD SONG
☆ பிரியமான தோழி
☆ காதல் கொண்டேன்
☆ ஜெயம்
Audio CD
★ உள்ளம் கேட்குமே
★ தென்னவன்
★ ஜெயம்
ரூபா 95/= மட்டுமே.
வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு.
மூர்த்தி வீடியோ & எலெக்ரோனிக்
மானிப்பாய்.
(சி-29811) (24-13-18)

நாகம்ஸ் சுன்னாகம்
30 ஆம் திகதி வரை
அஜித்குமார் (இருவேடம்), சிம்ரன், விவேக் நடித்த
வாலி
காட்சி நேரம்: 11.00, 2.00 (பு.நே.)
அடுத்த வெளியீடு கார்மேகம்
(31-12-18) (C29232)

நிறஞ்சனாஸ் சங்கானை
சரத்குமார், சிம்ரன் நடித்த
அரசு
தினசரி காட்சி : 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு
THE PEACE KEEPER
தினசரி 7.45 இற்கு.
(C29213) (31-12-18)

ராஜா யாழ்ப்பாணம்
இன்று முதல் இந்தியாவிலும் இலங்கையிலும்
ஒரே தின வெளியீடு
சித்தார்த், ஹரணி, விவேக



10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)
ரிக்கெற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

லிபேட்டி அச்சுவேலி
இன்று முதல்
ஸ்ரீகாந்த,த்ரிஷா நடித்த
(C29313)
காலை 11.00 மணிக்கு Red Scorpion
தினசரி காட்சி: 3.00, 7.00


## மரண அறிவித்தல்கள்

### நல்லையா கருணாநிதி

மயிலணி, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கொழும்பு, கோட்டை புகையிரத நிலையத்தில் கடமையாற்றியவருமான நல்லையா கருணாநிதி அவர்கள் கொழும்பில் 27.08.2003 இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மயிலணி, சுன்னாகத்தைச் சேர்ந்த நல்லையா - நவநீதம் தம்பதிகளின் செல்வப் புதல்வனும் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி முன்பாக, கோப்பாய் காலஞ்சென்ற வைரமுத்து-சின்னாச்சி தம்பதிகளின் மருமகனும் மகிழ்மலரின் அன்புக் கணவரும் வாமதேவன் தெய்வநிதியின் அருமைச் சகோதரனும் வசிகரன் (பழைய மாணவன் கிறிஸ்தவக் கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவன்), அசோக் (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் திருமதி இராசதுரை தங்கம்மா (கனடா), வ.இரத்தினம் (மட்டக்களப்பு), திருமதி நடராஜா சிவகாமிப்பிள்ளை (கனடா), வ.ஜயாத்துரை (கோப்பாய்), வ.சுப்பிரமணியம் (கோப்பாய்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (30.08.2003) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சுன்னாகம் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

*மயிலணி,*
*சுன்னாகம்.*
(21977)
தகவல்:
மகிழ்மலர் (மனைவி),
வசிகரன் (மகன்).

### சபாபதி இரத்தினசிங்கம் (சிவா)

நல்லூரைப் பிறப்பிடமாகவும் தற்போது இத்தாலியில் வசித்தவருமாகிய சபாபதி இரத்தினசிங்கம்(சிவா) 27.08.2003 அன்று இத்தாலியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாபதி - முத்துப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் செல்லத்துரை - இராஜலக்சுமி (பவளம்) தம்பதிகளின் அன்பு மருமகனும் சறோஜாவின் (ஆச்சி) அன்புக் கணவரும் சோபினி, பவிஷன் ஆகியோரின் அன்புத் தந்தையும் லீலாவதி, தனபாலசிங்கம் (பாலசிங்கம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் விமலதாஸ் (கண்ணன் - பிரான்ஸ்), லோகதாஸ் (விஜயன்), அரியதாஸ் (அதி - நல்லூர்) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (29.08.2003) வெள்ளிக்கிழமை இத்தாலியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*17/32, பண்டாரக்குளம் வீதி,*
*நல்லூர் வடக்கு,யாழ்ப்பாணம்.*
(21965) (32-12-18)
தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி சரஸ்வதி கணநாதன் (மலர்)

கந்தர்மடம், மணல்தறை ஒழுங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி சரஸ்வதி கணநாதன் நேற்று (28.08.2003) வியாழக்கிழமை காலை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமணி - சிந்தாமணி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும் கணநாதனின் அன்பு மனைவியும் சரோஜினி, சண்முகானந்தம் (கனடா), வசந்தகுமாரி, வசந்தகுமார் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஜெயபாலசிங்கம், உதயகுமார், தயாநிதி (இந்தியா), கிருபாநிதி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் மைதிலி (கலாசார அலுவலர், யாழ்ப்பாணப் பிரதேசசெயலகம்), ஸ்ரீஸ்கந்தராஜா (இளங்கோ-லண்டன்), வைதேகி (ஆசிரியை,யா/புங்குடுதீவு ஸ்ரீசுப்பிரமணிய மகளிர் வித்தியாலயம்,புங்குடுதீவு), ஜானகி (ஆசிரியை, கல்மடு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை வவுனியா) ஆகியோரின் அன்புத் தாயாரும் கலாநிதி விசாகரூபன் (சிரேஷ்ட விரிவுரையாளர் தமிழ்த்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்), தேவதாசன் (மருத்துவ ஆய்வு கூட தொழில்நுட்பவியலாளர், பொதுவைத்தியசாலை, திருகோணமலை), அஜந்தா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் கரிஷ்மாவின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் 31.08.2003 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*19/37,இரண்டாம் ஒழுங்கை,*
*பிறவுண் வீதி,கந்தர்மடம்.*
*தொலைபேசி:222 5363*
(C/29836) (12-18-29)
தகவல்:
த.கணநாதன் (கணவர்)

### திருமதி வேலுப்பிள்ளை சின்னம்மா

நாகர்கோவில் தெற்கைச் சொந்த இடமாகக்கொண்ட திருமதி வேலுப்பிள்ளை சின்னம்மா 27.08.2003 புதன்கிழமை இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இ.வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற மு.இராசம்மா (செம்பியன்பற்று), க.பொன்னையா (வரணி) ஆகியோரின் சகோதரியும் க.தவமணிதேவி, வே.தில்லைநாதன், வே.சிதம்பரநாதன், வே.அம்பலவாணேசன் (அதிபர் யா/செம்பியன்பற்று அ.த.க. பாடசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற சி.கந்தசாமி, தி.சந்திராதேவி, சி.கமலவேணி, அ.கற்பகலதா ஆகியோரின் மாமியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நேற்று (28.08.2003) வியாழக்கிழமை பி.ப. 4.00 மணியளவில் வசிப்பிட முகவரியில் நடைபெற்று, ஆனைவிழுந்தான் மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வசிப்பிட முகவரி:*
*புற்றளைப் பிள்ளையார் கோவிலடி,*
*புலோலி.*
(சி-29838) (32-12-18-29)
தகவல்:
க.தவமணிதேவி,
வே.தில்லைநாதன்,
வே.சிதம்பரநாதன்,
வே.அம்பலவாணேசன் (அதிபர்).

### சேவியர் யூலன் அன்ரன் (யூலியஸ்)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் மாதகலை வசிப்பிடமாகவும் கொண்ட சேவியர் யூலன் அன்ரன் (யூலியஸ்) 25.08.2003 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சேவியர்- யூலியற் தம்பதியினரின் அன்புப் புதல்வரும் காலஞ்சென்ற யூலியன் பிறசன்ரேசனின் அன்புக் கணவரும் டனிஸ், டிலிப் ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற ஜான்சன் காலஞ்சென்ற சித்திரா, பெனிக்னா, பூபாலன் (கனடா) ஆகியோரின் சகோதரரும் அண்ணாவி சின்னத்துரையின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல், நாளை (30.08.2003) சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணத்திலுள்ள அவரது இல்லத்திலிருந்து பூதவுடல், மாதகலுக்கு எடுத்துச்செல்லப்பட்டு பிற்பகல் 3 மணிக்கு திருப்பலியுடன் மாதகல் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*319, பாங்ஷால் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(21980) (12-18-29)
தகவல்:
[illegible]






ஜே.வீ.பியின் 4 நாள் பேரணி நேற்றுக் கொழும்பை வந்தடைந்த பின்னர் லிப்டன் சதுக்கத்தில் இடம்பெற்ற பொதுக்கூட்டத்தில் ஆயிரக் கணக்கானோர் கலந்துகொண்டிருப்பதையும் பேரணியில் கலந்துகொண்ட பிக்கு ஒருவர், ஜே.வீ.பீ. பொதுச் செயலாளர் வீமல் வீரவன்சவிற்கு ஆசீர்வதிக்கப்பட்ட நூல் கட்டுவதையும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினரும், ஜனாதிபதியின் ஆலோசகருமான அநுரா பண்டாரநாயக்க, ஜே.வீ.பீ. உறுப்பினர் ஒருவருடன் உரையாடுவதையும் படங்களில் காணலாம்.

# ஜே.வி.பியின் 4 நாள் பேரணி முடிவில் வீராவேச உரைகள்

கொழும்பு,ஓக.29

"தெற்கில் காலியில் இருந்து நாட்டின் தலைநகர் கொழும்பிற்குப் பாதயாத்திரையாக இந்தளவு ஜன சமுத்திரத்தை அழைத்துவர முடியுமென்றால், நோர்வேத் தூதரகத்தையோ, பிரதமரின் மாளிகையையோ சுற்றிவளைத்து அங்குள்ளவர்களை வெளியேற்றி வீட்டுக்கு அனுப்புவது என்பது முடியாத காரியமல்ல."

- இவ்வாறு ஜே.வி.பி. பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

புலிகளுக்கு இடைக்கால நிர்வாகம் வழங்கப்படுவதை எதிர்த்தும் அரசாங்கத்தின் பல செயல்களைக் கணடித்தும் கடந்த 25ஆம் திகதி காலியில் இருந்து புறப்பட்ட ஜே.வி.பியின் பாதயாத்திரை நேற்று மாலை 6.45 மணியளவில் கொழும்பு லிப்டன் சுற்றுவட்டத்தை வந்தடைந்தது.

அங்கு உரையாற்றும்போதே விமல் வீரவன்ச மேற்கண்டவாறு கர்ஜித்தார். ஜே.வி.பியின் இந்த நான்கு நாள பாதயாத்திரையின் இறுதிக்கட்டத்தில் பொ.ஐ.மு. நாடாளுமன்ற உறுப்பினர்களான அநுரா பண்டாரநாயக்க, மங்கள சமரவீர, அர்ஜுன ரணதுங்க ஆகியோர் கலந்துகொண்டனர்.

அநுரா பண்டாரநாயக்க பாதயாத்திரையின் இறுதியில் நடைபெற்ற கூட்டத்திலும் கலந்துகொண்டு உரையாற்றினார். ஜே.வி.பி.பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா, உறுப்பினர்களான இரா.சந்திரசேகரன், அஞ்ஞான் உம்மா ஆகியோரும் சமுகமளித்திருந்தனர். பாதயாத்திரையில் ஆயிரக்கணக்கான பொதுமக்களும் கலந்துகொண்டனர்.

விமல் வீரவன்ச தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

நாட்டின் மூன்றில் ஒரு பங்கைப் புலிகளுக்கு அரசு தாரை வார்த்துக் கொடுப்பதை நாமோ அல்லது இங்கு திரண்டுள்ள மக்களோ அனுமதிக்கப போவதில்லை. இதனை சகல அரசியல் தலைவர்களும் உணர்ந்து கொள்ளவேண்டும். எமது மக்களின் உணர்வுகளைப் புரிந்து செயற்படும் எந்தவொரு தலைவருடனும் இணைந்து செயற்பட நாம் தயார் - இப்படி அவர் கூறினார்.

அநுரா பண்டாரநாயக்க உரையாற்றும்போது தெரிவித்ததாவது:-

எனது உயிரைப் பணயம்வைத்தாவது ஜே.வி.பி. - ஸ்ரீல.சு.கட்சி கூட்டணியை அமைப்பேன். இந்தக் கூட்டணி அமையப்போவதை கண்டு அஞ்சுபவர்கள் ஊடகங்களின் ஊடாக கூட்டணி அமையாது எனப் பிரசாரம் செய்கின்றனர். ஆனால், இந்தக் கூட்டணியை அமைத்தே தீருவது என்பதில் நாம் உறுதியாக இருக்கின்றோம்.

இந்தக் கூட்டத்திற்கு அழைப்பு வந்துள்ளது என நான் ஜனாதிபதியிடம் தெரிவித்தபோது அவர் கட்டாயம் இதில் கலந்துகொள்ளவேண்டும் என என்னைக் கேட்டுக்கொண்டார். இந்தக் கூட்டத்தில் ஜனாதிபதியின் அனுமதியுடனேயே கலந்துகொள்கின்றேன். - இப்படி அநுரா பண்டாரநாயக்க தெரிவித்தார்.

## மக்கள்...

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் கண்ணிவெடி அகற்றுவதற்கு 32 லட்சம் அமெரிக்க டொலர்களை ஒதுக்கியுள்ளது. 16 மாத காலத்தில் திட்டம் பூர்த்தியடையும். ஏற்கனவே ஒன்றரை லட்சம் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன. ஒன்பது அரச சார்பற்ற நிறுவனங்கள் கண்ணிவெடிகள் அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ளன.

யுத்தங்கள் நடைபெறும் போது கண்ணிவெடிகள் புதைக்கப்படுவதை தடை செய்வதால் மட்டுமே இப்பிரச்சினை தீரும்.

- இவ்வாறு அவர் சொன்னார்.

## புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வினர் 3ஆம் திகதி இலங்கை திரும்புவர். சு.ப.தமிழ்ச்செல்வன் குழுவினர் ஐரோப்பிய நாடுகளுக்கும் செல்வர் என எதிர்பார்க்கப்படுகின்றது. இப்பயணத்திற்கான திகதி இன்னும் நிர்ணயிக்கப்படவில்லை.

இதேவேளை பரீஸில் விடுதலைப் புலிகளின் நிதிசேகரிப்பு பொறுப்பாளர்களாக இருந்து சுட்டுக்கொல்லப்பட்ட ஜெகன், நாதன் மற்றும் ஆகியோரின் நினைவுதினம் நேற்று அங்கு அனுஷ்டிக்கப்பட்டது. அந்த நிகழ்வுகளில் தமிழ்ச்செல்வன் குழுவினர் கலந்துகொண்டனர்.

## சமாதான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"இதுவரையிலான சமாதானப் பாதையில் நிகழ்ந்தவற்றையும் கண்ட அனுபவங்களையும் பார்க்கையில் தவறுகள் நடந்திருப்பது தெரிகிறது. தவறுகள் எவை என்பது குறித்து அரசு அல்லது விடுதலைப் புலிகள் விமர்சிக்காதது ஒரு பிரச்சினையாகும்."சமயத் தலைவர்கள், புத்திஜீவிகள், முன்னாள் இராணுவத் தளபதிகள், பல தரப்பட்ட அமைப்பினர் ஆகியோர் ஒன்றுகூடி இந்த யோசனைகளைத் தயாரித்து வருகின்றனா."

- இவ்வாறு கிங்ஸ்லி றொட்றிகோ மேலும் தெரிவித்திருக்கிறார்.

## மடு ஆலய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மட்டுமே இந்தப் பாதையூடாகப் பயணம் செய்வதற்கு இராணுவம் அனுமதித்து வருகின்றது. ஏனையோர் இந்த வீதியைப் பயன்படுத்துவதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இதனால், பாதிக்கப்பட்டிருக்கும் பெரியமடு, வீரிசுட்டான், பண்டிவிரிச்சான், தம்பனை, கீரிசுட்டான், முள்ளிக்குளம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தமது போக்குவரத்துக்கும் இந்த வீதியைத் திறந்துவிடுமாறு கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இதன் ஒரு பகுதியாக இந்த வீதியை யாத்திரிகர்கள் பயன்படுத்துவதையும் அவர்கள் தடைசெய்து போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இதனையடுத்து இந்த வீதியை பொதுமக்கள் பாவனைக்கும் திறந்துவிடுமாறு விடுதலைப் புலிகளின் அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் தங்கன் கடந்த வாரம் கிளிநொச்சியில் தம்மைச் சந்தித்த செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதியிடம் நேரில் கோரியுள்ளார்.

## தீர்வுக்கான அத்திவார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரா.சம்பந்தன் விளக்கம் அளித்தார்.

வடக்கு-கிழக்கு இணைப்பைத் துண்டிப்பதிலும் குரங்குபாஞ்சான் முகாமிலிருந்து புலிகளை அகற்றுவதிலும் ஜனாதிபதி தீவிர அக்கறை கொண்டுள்ளார் என்று அவருடைய ஊடகப் பேச்சாளரும், பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பேச்சாளரும் குறிப்பிட்டுள்ளார்கள்.

ஜனாதிபதி இவற்றைச் செய்ய முனைவதன் மூலம் தம் மீது நம்பிக்கை வைத்த தமிழ் மக்களுக்கு பெரும் துரோகம் இழைக்கிறார் என்று சம்பந்தன் குற்றஞ்சாட்டினார். இணைந்த வடக்கு-கிழக்கு தமிழ்பேசும் மக்களின் பாரம்பரிய வாழ்விடம் என்ற அடிப்படையிலேயே பேச்சு மூலம் இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அந்த அடிப்படையையே ஜனாதிபதி தகர்த்து பேச்சுக்களை அர்த்தமற்றவையாக்கி தீர்வு ஏற்படமுடியாமல் செய்கிறார் என்றார் சம்பந்தன்.

குரங்குபாஞ்சானில் புலிகள் நீண்டகாலமாகவே முகாமை வைத்திருக்கிறார்கள். அவர்களை அங்கிருந்து அகற்றுவதற்கு எந்த முகாந்திரமும் இல்லை என்றும் அவர் சொன்னார்.

முஸ்லிம்களின் பிரச்சினைகள் பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில்:-

தமிழ்மக்களைப் போன்று முஸ்லிம்களும் சுயகௌரவத்துடனும் உரிமைகளுடனும் வாழவேண்டும். அவர்கள் சகல வழிகளிலும் பாதுகாக்கப்படவேண்டும் என்பதில் தமிழ் அமைப்புக்கள் உறுதியாகவே உள்ளன. தமிழீழ விடுதலைப் புலிகளும் இதற்கான உத்தரவாதத்தை அளித்துள்ளனர் என்றார். (ம-6)

(மற்றொரு செய்தி I ஆம் பக்கத்தில்)

கூ.மொ.விற்பனை நிலையத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும்

# ஊழல் மோசடிக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப் பணிப்பு

கொழும்பு,ஓக.29

கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தில் இடம்பெற்றுள்ளன என்று கூறப்படும் ஊழல் மற்றும் மோசடிகள் சம்பந்தமாக உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அறிவித்துள்ளார்.

இதுசம்பந்தமாக ஜனாதிபதி அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தில் இடம்பெற்றுள்ளன என்று கருதப்படும் ஊழல் மற்றும் மோசடிகள் பலவற்றுள் ஐந்து குற்றச்சாட்டுக்கள் சம்பந்தமாக பிரதமரின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளார்.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் சம்பந்தமாக தொழிற்சங்கங்களிடமிருந்தும் ஏனைய அமைப்புக்களிடமிருந்தும் எனக்கு பெரும்பாலான முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று குறிப்பிடும் ஜனாதிபதி இதுகுறித்து எடுக்கவிருக்கும் நடவடிக்கைகள் பற்றி உடனடியாக ஒரு பதிலை சமர்ப்பிக்குமாறு பிரதமரைக் கேட்டுள்ளார்.

## வடபகுதிக்கு அப்பகுதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கில் உயர் பாதுகாப்பு வலயங்கள் இருப்பதற்கு எந்தவொரு சட்ட ஆதாரமும் இல்லை. வலிகாமம் வடக்கு, மண்டைதீவு, கரம்பொன், உசன், நாகர்கோவில் ஆகிய பகுதிகளில் இன்னமும் உயர் பாதுகாப்பு வலயங்கள் உள்ளன.

பிரதேச செயலாளர் பிரிவு அடிப்படையில் இடம்பெயர்ந்தவர்கள் விவரம் வருமாறு:-

சாவகச்சேரி - 987 குடும்பங்கள் - 3,538 ஆள்கள், நல்லூர் - 1,283 குடும்பங்கள் - 5,507 ஆள்கள், சங்கானை - 400 குடும்பங்கள் - 2420 ஆள்கள், சண்டிலிப்பாய் - 400 குடும்பங்கள் - 1400 ஆள்கள், யாழ்ப்பாணம் - 180 குடும்பங்கள் - 729 ஆள்கள், ஊர்காவற்றுறை - 299 குடும் பங்கள் - 1241 ஆள்கள், மருதங் கேணி - 897 குடும்பங்கள் - 3743 ஆள்கள், பருத்தித்துறை - 307 குடும் பங்கள் - 1291 ஆள்கள், தெல்லிப்பழை - 15,547 குடும்பங்கள் - 65,333 ஆள்கள்.

உயர்பாதுகாப்பு வலயங்கள் என்று கூறப்படும் பிரதேசங்களில் கடற்படையினர் 75 வீடுகளில் வசிக்கின்றனர். இதனால், சொந்த இடங்களில் மீளக் குடியமர்வதற்காக வன்னியிலிருந்து திரும்பி வந்த ஆயிரத்து 500 குடும்பங்கள் அகதி முகாம்களில தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் தத்தமது சொந்த வீடுகளில் குடியமர அனுமதிக்கப்பட வேண்டும்.

இதுவரை 22 ஆயிரத்து 234 குடும்பங்களைச் சேர்ந்த 92 ஆயிரத்து 34 பேர் உயர் பாதுகாப்பு வலயங்களில் குடியமர அனுமதிக்கப் பட வில்லை

தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள 45 கிராம சேவகர் பிரிவுகளில் 28 பிரிவுகள் உயர் பாதுகாப்பு வலயங்களின் கீழ் வருகினறன. இங்கு மீளக்குடியமர எவரும் அனுமதிக்கப்படவில்லை. ஏனையவற்றில் 12 ஆவது பிரிவு படையினர் முழுமையாக ஆக்கிரமித்துள்ளனர்.

பலாலி விமானநிலையம், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி-பலாலி, மயிலிட்டி மீன்பிடித் துறைமுகம், மார்புச் சிகிச்சைவைத்திய நிலையம் - மயிலிட்டி, காங்கேசன்துறை துறைமுகம், சிமெந்துத் தொழிற்சாலை, கீரிமலை கோவில், மாவிட்டபுரம் கோவில், தெல்லிப்பழை மாவட்ட வைத்திய சாலை ஆகியவை இன்னமும் உயர் பாதுகாப்பு வலயங்களிலேயே உள்ளன.

- இவ்வாறு தனது கடிதத்தில் தெரிவித்திருக்கும் விநாயகமூர்த்தி எம்.பி. இது விடயம் தொடர்பாக பேச நேரில் சந்திப்பதற்கு வாய்ப்புத் தருமாறும் பிரதமரைக் கேட்டுள்ளார்.


NEW SCIENCE COLLEGE

இணைந்த கணிதம்

A/L 2004

நேர்கோடு, சார்புவேகம் — Sat.,Sun. 9.00 - 11.00

சட்டப்படல் — Sat.,Sun. 4.00 - 5.00

சிக்கல் எண்கள் — Sat.,Sun. 5.00 - 6.00

ஆரம்பம்:30.08.2003

A/L 2005

எல்லைகள், எறியம் — Sat.,Sun. 7.00 - 9.00

ஆரம்பம்:30.08.2003

மூவிசைகளின் சமநிலை Mon.,Tue. 4.30 - 5.30

A/L 2005 PAPER CLASS

Thu. 3.15 - 5.00 ஆரம்பம்:04.09.2003

P.செந்தில்நாதன் B.Sc. (21961)(12-18)

A/L DAY CLASS

தமிழ்-2004

நிரு கோண்டாவில்

சனி, ஞாயிறு, 3.00 p.m.

வெள்ளி 5.00 p.m.

திங்கள் 6.30 a.m.

திரு.லிங்கம்

(21834) (12)


## மரண அறிவித்தல்

### தம்பியையா குணபாலசிங்கம்

**(சமாதான நீதிவானும் பிரபல வைத்தியரும்)**

அளவெட்டி மேற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட தம்பியையா குணபாலசிங்கம் நேற்று (28.08.2003) வியாழன் மாலை அகாலமரணமடைந்தார்.

அன்னார் அருந்ததியின் அன்புக் கணவரும் அருட்கவி சி.வினாசித்தம்பிப் புலவரின் மூத்த மருமகனும் கீதாகரன் (கனடா), ஞானசுதன் (தொழில்நுட்பக் கல்லூரி), மாலா (பிரான்ஸ்), கவிநிருபா ஆகியோரின் பாசமிகு தந்தையும் குலமகள், கிருபா, நந்தன் ஆகியோரின் மாமனாரும் வினுசன், மதுஷன், யதுஷா, மதுவித்தியா, நிருபன், நிலக்ஷன், ஹமாயினி, கோவர்த்தனா ஆகியோரின் அன்புப் பேரனும் சிறிதரன், சிவகாந்தன், டாக்டர் சிவலிங்கரானி, திருமதி ஸ்ரீரங்கநாயகி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.08.2003) சனிக்கிழமை மாலை 4.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அளவெட்டி மேற்கு, பத்துப்பனையடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அளவெட்டி மேற்கு,*
*அளவெட்டி.*

தகவல்:
அருந்ததி (மனைவி).

(29841)(12-18)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.08.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# வடக்கு, கிழக்கைப் பிரித்தால் நாடு முழுவதற்குமே கேடாகும்!

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எச்சரிக்கை

நேற்று நடந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செய்தியாளர் மாநாட்டில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் இரா.சம்பந்தன் எம்.பி. அளித்த விளக்கத்தின் விவரம் வருமாறு:-

1994ஆம் ஆண்டு ஜனாதிபதி, அரசியலில் காலடி வைத்த போது தமிழ்மக்களின் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வொன்றை ஏற்படுத்துவேன். சமஷ்டி முறையில் அதிகாரங்கள் கொண்ட தமிழ் பிராந்தியம் ஒன்றை வழங்குவேன் என்றெல்லாம் உறுதியளித்தார்.

ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்காவினால் மட்டுமே தமிழர்களின் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண முடியும் என தமிழ்மக்கள் நம்பினர். இதனால் 90 வீதமான தமிழர்கள் ஜனாதிபதிக்கு வாக்களித்து அவரை வெற்றியடையச் செய்தனர்.

ஜனாதிபதியின் அண்மைக்காலப் போக்குகள் தமிழ்மக்களுக்குப் பெரும ஏமாற்றத்தையே ஏற்படுத்திவிட்டன.

தமிழ்மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதற்கான அடிப்படை அத்திவாரமே வடக்கு, கிழக்கு இணைப்புத்தான், கடந்த 15 வருடங்களுக்கு மேல் இணைப்பு இருந்து வருகிறது.

இப்பொழுது ஜனாதிபதி வடக்கையும், கிழக்கையும் துண்டிக்க வேண்டும் என்றால் அது தீர்வுக்கான அத்திவாரத்தையே இடிக்கும் ஒரு செயலாகும். இரண்டாகப் பிரித்தால் சமாதானப் பேச்சுக்களும் அர்த்தமற்றவையாகவும் அவசியமற்றவையாகவும் மாறிவிடும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பாரம்பரியமாக வாழும் தமிழர்களின் அபிலாஷையும் அடிப்படை உரிமையும் வடக்கு, கிழக்கு இணைந்த தனி அரசியல் அலகுதான்.

இதனைக் குழப்பிவிட முனைபவர்கள் எவரானாலும் அவர்கள் சமாதானத்திற்கு விரோதமானவர்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

வடக்கு, கிழக்கு மாகாணத்தில் பலநூறு வருடங்களாக தமிழர்களும முஸ்லிம்களும் சகோதரத்துவத்துடன் வாழ்கிறோம். வடக்கும், கிழக்கும் இணைந்த நிலையில் முஸ்லிம்களின் பாதுகாப்பும் உரிமைகளும் பாதுகாக்கப்படவேண்டும் என்பதுதான் முஸ்லிம்களின் கோரிக்கை.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உட்பட அனைத்து முஸ்லிம் அமைப்புக்களும் இதனைத்தான் வலியுறுத்துகின்றன.

ஆனால், ஸ்ரீ.ல.மு.காங்கிரஸில் இருந்து விலகிக்கொண்ட ஒரு தனி நபரின் சகாக்கள் மட்டுமே பிரிய வேண்டும் என்கின்றனர்.

அரசும், புலிகளும் செய்துகொண்ட சமாதான ஒப்பந்தத்தின் பின், தமிழ், முஸ்லிம் மக்கள் மத்தியில் ஆங்காங்கே சில கசப்பான சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. தமிழர்களும், முஸ்லிம்களும் கொல்லப்பட்டுள்ளனர்.

தனிப்பட்ட முறையில் அரசியல் ஆதாயம் தேடும் சிலர் இதனைப் பெரிதுபடுத்தி இனவாதத்தை தூண்டி அமைதியை குலைக்க முனைகின்றனர்.

உதாரணமாக கிழக்கு மாகாணத்தில் பரபரப்பையும், அமைதியற்ற சூழ்நிலையையும் ஏற்படுத்திய இரண்டு சம்பவங்கள் பொய்யானவை என்பது இப்போது தெரியவந்துள்ளது.

தமிழ்மக்களைப் போன்று முஸ்லிம்களும் சுய கௌரவத்துடனும், உரிமைகளுடனும் வாழவேண்டும். அவர்கள் சகல வழிகளிலும் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் தமிழ் அமைப்புகள் உறுதியாகவே இருக்கின்றன. தமிழீழ விடுதலைப் புலிகளும் இதற்கான உத்தரவாதத்தை அளித்துள்ளனர்.

புலிகள் அமைப்பு, முஸ்லிம் காங்கிரஸ் உட்பட சகல முஸ்லிம் அமைப்புக்களுடனும் இப்பொழுது பேச்சுக்களை நடத்தி வருகின்றது. கிழக்கு மாகாணத்தில் தமிழர்களும், முஸ்லிம்களும் பரஸ்பர நல்லுறவுடன் கூடி வாழ்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தென்பகுதியில் எப்படி தமிழ்மக்கள சிங்கள - முஸ்லிம் மக்களுடன் ஒற்றுமையாக வாழ்கின்றனரோ, அதே போன்று வடக்கு கிழக்கு மாகாணத்தில் தமிழர்களுடன் சிங்களவர்களும் முஸ்லிம்களும் பாதுகாப்புடன் வாழ முடியும். இதற்கான உத்தரவாதம் புலிகளால் வழங்கப்பட்டுள்ளது.

முஸ்லிம்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்று கூறப்படுகின்றது. ஆனால், நாடு சுதந்திரம் அடைந்த 50 வருடங்களில் சிங்களவர்களோ, முஸ்லிம்களோ பாதிக்கப்படவில்லை. ஆனால், தொடர்ச்சியாக தமிழர்களே பாதிக்கப்பட்டவர்கள் என்பதை மறந்துவிடக்கூடாது.

ஆனால், சமாதானத்தின் வழியில் நிரந்தரத் தீர்வு காணவேண்டும் என்பதால் அமைதியாகவும், பொறுமையாகவும், நிதானமாகவும் செயல்படுகின்றோம். இதனைப் பலவீனமாகக் கருதிவிடக்கூடாது.

குரங்குபாஞ்சான்குளம் புலிகளின் முகாம் உடனடியாக அகற்றப்பட வேண்டும். இது ஒரு யுத்தநிறுத்த மீறல் என ஜனாதிபதி குற்றம் சுமத்துகின்றார்.

இது தவறு, குரங்குபாஞ்சான்குளம் ஒரு எல்லைக்கிராமம் அங்கு ஏற்கனவே புலிகளின் முகாம் இயங்கி வந்ததையும், அங்கு மாவீரர்கள் அடக்கம் செய்யப்பட்டிருப்பதையும் புலிகள் ஆதாரங்களுடன் கண்காணிப்புக் குழுவிடம் காட்டி நிரூபித்துள்ளனர்.

மேலும் கிட்டிய தூரத்திலேயே பொலீஸ் பாதுகாப்பு மையமும், இராணுவ முகாமும் இருக்கின்றன. எனவே, குரங்குபாஞ்சான்குளம் புலிகளின் முகாமால் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்று கூறுவது வேடிக்கையானது. குரங்குபாஞ்சான்குளம் முகாம் விவகாரம் சமாதானப் பேச்சுக்குக் குந்தகம் ஏற்படுத்தும் என்று கூறமுடியாது.

எப்படி இருந்த போதிலும் அரசு மேற்கொள்ளும் சமாதான நடவடிக்கைகளுக்குக் குந்தகம் ஏற்படுத்தும் வகையில் ஜனாதிபதி செயல்படக் கூடாது என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்துகின்றது. இப்படி சம்பந்தன் எம்.பி.செய்தியாளர்களிடம் விளக்கிக் கூறினார்.

இந்தச் செய்தியாளர் மாநாட்டில் கூட்டமைப்பின் பிரதிநிதிகளாக விநாயகமூர்த்தி, இரா.சம்பந்தன், ஜோசப் பரராஜசிங்கம், சிவாஜிலிங்கம், கஜேந்திரகுமார் ஆகியோருடன் சுரேஷ் பிரேமச்சந்திரன், குமரகுருபரன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# பிரதான கணனிமொழியாக தமிழ் வளர்ச்சி பெற்றுள்ளது

## சென்னை மாநாடு பற்றி அமைச்சர் சந்திரசேகரன்

**சென்னையில் இடம்பெற்ற தமிழ் இணைய மாநாட்டில் கலந்து கொண்ட சமூக அபிவிருத்தி அமைச்சர் பெ.சந்திரசேகரன் மாநாடு பற்றி தெரிவித்த கருத்து இங்கு பிரசுரமாகின்றது.**

தமிழ்மொழியில் தகவல் தொழிலநுட்பம் தொடர்பான சர்வதேச மாநாடில் இலங்கையின் அமைச்சர் என்ற வகையில் எமது அரசினதும் இலங்கையில் வாழ்கின்ற 30 லட்சம் தமிழ் மக்கள் சார்பிலும் கலந்துகொள்கிறேன். உலகில் 45இற்கும் மேற்பட்ட நாடுகளில் வாழ்கின்ற கோடிக்கணக்கான தமிழர்களின் தாய்மொழியாம் தமிழ், இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என்று முத்தமிழாக மலர்ந்து இன்று அறிவியல் மொழியாக வளர்ச்சி பெற்றுள்ளது.

இத்தகைய வளர்ச்சியைப் பெற்றுள்ள தமிழ்மொழி இன்று இந்தியாவில் பிரதானமான கணனிமொழியாக வளர்ச்சி பெற்றுள்ள ஒரே மொழி என்று அறிவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

தமிழை அறிவியல் மொழியாகவும், கணனிமொழியாகவும் வளர்ச்சி பெற உதவிவரும் இத்தகைய சர்வதேச மாநாட்டிற்குத் தமிழக அரசின் முதல்வர் செல்வி டாக்டர் ஜெயலலிதாவின் முழு ஆதரவும், ஆசியும் இருப்பது பெரும் மகிழ்ச்சிக்குரியதாகும்.

தகவல் தொழில்நுட்ப அமைச்சர் டி.ஜெயகுமார், அறிஞர்களான முனைவர் பொன் வைக்கோ, முனைவர் ஆனந்தகிருஷ்ணன், டாக்டர் கல்யாணசுந்தரம், டாக்டர் மல்லிகா அர்ச்சுனன், டாக்டர் என்.கண்ணன், அருள்மகிழன் ஆகியோர் அரும்பாடுபட்டனர்.

கணனியை வாழ்க்கை மேம்பாட்டிற்காகப் பயன்படுத்தி நன்மைபெற கட்டாயமாக ஆங்கில மொழியை அறிந்திருக்கவேண்டிய நிலை ஒரு காலத்தில் இருந்தது. ஆனால், தகவல் தொழில்நுட்பப் புரட்சியின் முழுமையான பயனைத் தமிழ் கூறும் நல்லுலகம் பெறவேண்டுமாயின், தமிழ்மொழி ஆங்கில மொழிக்கு இணையாகக் கணனிமொழியாக உருவாக வேண்டிய அவசியமிருந்தது.

கணனியின் பலன்களை ஆங்கில மறியாத சாதாரண தமிழ்மக்கள் உணரவேண்டுமென்றால் தமிழ்மொழியையும் கணனிமொழியாக்கவேண்டும என்று சிந்தித்துச் செயலாற்றி வருகிறார்கள் தமிழகத்தையும் ஏனைய உலக நாடுகளையும் சேர்ந்த அறிஞர்கள்.

இன்று 45இற்கும் மேற்பட்ட நாடுகளில் வாழும் தமிழ்மக்களும் அவர்களுடைய வழித்தோன்றல்களும் பலவேறு மொழிகளைப் பேசுகின்றனர்.

இங்கிலாந்து, ஜேர்மனி, பிரான்ஸ், சுவீடன், டென்மார்க், நோர்வே என பல்வேறு நாடுகளில் பல்வேறு மொழிகளைப் பேசும் தமிழர்களிடையே உறவுப் பாலத்தை அமைக்கக்கூடிய மொழி அவர்தம் தாய்மொழியாம் தமிழேயாகும் என்பதில் ஐயமில்லை.

எனவே, தமிழ்மொழி கணனிமொழியாக்கப்பட்டால்தான் அது உறுதியான உறவுப் பாலமாக அமையமுடியும் என்ற நிலை இன்று ஏற்பட்டுவிட்டது.

இதனை உணர்ந்த தமிழகம், சிங்கப்பூர், மலேசியா, இலங்கை மற்றும் மேற்கு நாடுகளைச் சேர்ந்த தமிழறிஞர்கள் ஒன்றுகூடி தமிழை இன்று மேற்கத்தைய நாட்டு மொழிகளுக்கு ஈடான கணனிமொழியாக்கி ஒரு சிறந்த உறவுப் பாலத்தை ஏற்படுத்தி உள்ளனர்.

இன்று இக்கட்டத்தையும் கடந்து கணனி வழியாகத் தமிழ்மொழியைப் பயன்படுத்தி எவ்வாறு தமிழரின் கல்வியை மேம்படுத்தலாம் என்பது பற்றி இச்சர்வதேச மாநாடு ஆராய்கிறது.

இன்று கல்விச் செயற்பாட்டில் உலகளாவிய ரீதியில் ஏற்பட்டுள்ள மாற்றம் காரணமாக மாணவர்களுக்குச் சுய கற்றலுக்கு பிரதான இடமளிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர்கள் மாணவர்களுக்கு வழிகாட்டி, அவர்களின் கற்றலை இலகுபடுத்துவதும் மாணவர்கள் அவர்களுடைய உதவியுடன் சுயமாகக் கற்றலில் ஈடுபடுவதும் இன்று பெரிதும் வலியுறுத்தப்படுகிறது.

முன்னர் போல் கல்வி இன்று பாடசாலைகளுடனேயோ அல்லது பல்கலைக்கழகத்துடனேயோ முடிந்து விடுவதில்லை. இன்று ஏற்பட்டுள்ள அறிவியல் வளர்ச்சியும் தொடர்ச்சியாக மாற்றம் பெற்று வரும் அறிவுத் தொகுதியும் முறையான கல்வியறிவடைந்த பின்னரும் வாழ்நாள் முழுவதும் கற்றாகவேண்டும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

இத்தகைய வாழ்க்கை நீடித்த கல்வியைப் பெற்று ஏற்றமுற வாழவேண்டுமாயின் மாணவர்கள் சுயமாகக் கற்கும் திறன்களைப் பெற்றவர்களாக இருக்கவேண்டும்.

அத்திறன்களைப் பெற வெறுமனே நூல்நிலையத்தில் மட்டும் தங்கியிராது தமிழ் இணையத்தையும் கல்வி சார்ந்த மென் பொருள்களையும் பயன்படுத்தி தமது அறிவு தாகத்தையும், தேவைகளையும் பூர்த்தி செய்யமுடியும்.

அத்துடன் இன்று பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும் கல்வி பெறும் மாணவர்கள் தமக்குப் பாடநூல்களும், ஆசிரியர்களும் வழங்கும அறிவுக்கு மேலாக தமிழ்மென்பொருள களைப் பயன்படுத்தி தமது அறிவை வளர்ப்பதற்கு ஏதுவாக அம்மென் பொருள்கள் பற்றிய கலந்துரையாடல அவசியமாகின்றது.

மிகவும் முக்கியமாக தமிழ்மொழியையும், பண்பாட்டையும் கற்றுக் கொள்ள வசதியற்ற மேற்கத்திய நாடுகளில் வாழும் தமிழ்ப் பிள்ளைகள் தகவல் தொழில்நுட்ப வசதிகளைப் பயன்படுத்தி தமிழைக் கற்க விசேடமான மென்பொருள்கள்

(10 ஆம் பக்கம் பார்க்க)


சனிக்கிழமை அதிர்ஷ்டம்




உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட்
தொடர் இல. 2897099 இருந்து
2916922 வரை
சீட்டிழுப்பு இல. 1430
திகதி 27.08.2003




வெற்றி எண்கள்
08 27 39 41 49

போனஸ் எண்
28

ஜக்பொட் பரிசு
ரூபா.2,451,250/- வெல்லப்படவில்லை

| பொருந்திய எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத்தொகை | தொகை |
|---|---|---|---|
| 5 | - | 2,451,250/- | - |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 01 | 100,000/- | 100,000/- |
| 4 | 138 | 10,000/- | 1,380,000/- |
| 3 | 6,151 | 500/- | 3,075,500/- |
| 2 | 104,065 | 20/- | 2,081,300/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 08ம் எண் (போனஸ் எண் தவிர்த்து) | 127,372 | 10/- | 1,273,720/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூபா.7,910,520/-

இந்த சனிக்கிழமைக்கான ஜக்பொட்
ரூபா.3,437,250/-

தொடர் இல. 3880908க்கு மேற்பட்ட பச்சை நிற டிக்கட்டுகள் 2003 ஆகஸ்ட் 30ம் திகதி சனிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் தங்கப்பரிசு வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

2898009-9-07
2904299-6-49
2902743-8-59
2898440-1-03
2899036-4-62

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கல் வீதி,
கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக),
யாழ்ப்பாணம்.

PHOENIX O&M

# நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு 'இன்டர் நெட்', 'ஈ-மெயில்' வசதி

கொழும்பு,ஓக.29

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு 'இன்டர்நெட்', 'ஈ-மெயில்' வசதிகள் செய்து கொடுக்கப்படுமென்று சபா நாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

பொதுநலவாய நாடாளுமன்றச் சங்க ஆசிய பிராந்திய மாநாடு தொடர்பாக விளக்கமளிக்கும் செய்தியாளர் மாநாடு நேற்றுமுன்தினம் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெற்றது.

இந்த மாநாட்டின்போதே சபாநாயகர் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தகவல் தருகையில் கூறியதாவது:-

நாடாளுமன்றம் தொடர்பான விடயங்களை அறிந்துகொள்ளவென புதிய இணையத்தளம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதில் நாடாளுமன்ற நடப்புகளை அறிந்துகொள்ளலாம்.

நாடாளுமன்ற நிகழ்வுகளை பொது மக்களும் அறிந்துகொள்ள வேண்டும். இதனால், நாடாளுமன்ற அமர்வுகளை நேரடியாக தொலைக்காட்சியில் ஒளிபரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கான அங்கீகாரம் கிடைத்ததும் ஒளிபரப்பு ஆரம்பமாகும். நாடாளுமன்றத்தில் உறுப்பினர்களின் வசதிக்காக "சைபர் கபே" ஒன்றும் ஆரம்பிக்கப்படும்.

- இவ்வாறு சபாநாயகர் தெரிவித்தார்.

# பாதுகாப்பு அமைச்சை ஜனாதிபதி சந்திரிகாவே பொறுப்பேற்க வேண்டும்

## சங்க நாயக்கர் சம்மேளனம் கோரிக்கை

கொழும்பு,ஓக.29

நாட்டின் பாதுகாப்பு கேள்விக்குறியாகி உள்ளதால் பாதுகாப்பு அமைச்சை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பொறுப்பேற்கவேண்டும் என தேசிய சங்க நாயக்கர் சம்மேளனம் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

அவசரகாலச் சட்டம் நடைமுறையில் இல்லாததால் வடக்கு - கிழக்கு மாகாணங்களைப் பிரிப்பதற்குத் தேவையான சட்ட நடவடிக்கைகளை எடுக்குமாறும் இந்த சம்மேளனம் ஜனாதிபதியிடம் கோரியுள்ளது.

ஜனாதிபதியை அவரது மாளிகையில் வைத்து சங்க நாயக்கர்கள் நேற்றுமுன்தினம் கலந்துரையாடியபோதே இந்தக் கோரிக்கைகளை விடுத்ததாக ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பின்போது, வடக்கு - கிழக்கு பிரதேசங்களில் பொது மக்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகியுள்ளதாக சங்க நாயக்கர்கள் ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அத்துடன், இந்த நிலைமைகள் தொடருமானால் நாட்டின் பாதுகாப்பு பெரும் கேள்விக்குறியாகிவிடும் எனவும் ஜனாதிபதியிடம் எடுத்துக் கூறிய வலிகம ஞானரத்தன தேரர், நாட்டின் நலனைக் கருத்திற்கொண்டு பாதுகாப்பு அமைச்சை ஜனாதிபதி பொறுப்பேற்க வேண்டும் எனக் கோரியதாக அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## முன்பள்ளி விளையாட்டு விழா

சர்வோதயம் அமைப்பின் கீழ் இயங்கும் ஆறுகால்மடம் அறிவொளி பாலர் பாடசாலையின் விளையாட்டு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வண்ணை வைத்திலிங்கம் வித்தியாசாலை மைதானத்தில் சி.க.தம்பிராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக யாழ்.மாநகர சபை ஆணையாளர் இ.இராமலிங்கம் கலந்து கொள்ளவுள்ளார். (எ-10)


ஒம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் சுபமங்களகரமான சுபானு வருடம் ஆவணித்திங்கள் 15 ஆம் நாள் (01.09.2003) திங்கட்கிழமை காலை 10.10 மணி முதல் 11.22 மணி வரையுள்ள துலாலக்கினமும் சுவாதி நட்சத்திரமும் அமிர்த யோகமும் கூடிய சுபமுகூர்த்த சுபவேளையில்

சபாரத்தினம் ஆச்சாரியார் தம்பதிகளின் கனிஷ்ட புதல்வன் திருவளர்செல்வன் **சிவகுமார்** அவர்களுக்கும்

ஜீவரட்ணம் ஆச்சாரியா தம்பதிகளின் ஏக புதல்வி திருவளர்செல்வி **ஜெயவாணி** அவர்களுக்கும்



அம்பிகை திருவருள் துணை கொண்டு **திருநெல்வேலி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில்** திருமாங்கல்ய தாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள அனைவரையும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்:

திரு.திருமதி செ.சபாரத்தினம் ஆச்சாரியார் குடும்பத்தினர்.
'இரத்தின மஹால்"
தலங்காவல் பிள்ளையார் கோயில் வீதி,
திருநெல்வேலி தெற்கு,
யாழ்ப்பாணம்..(21959) (25-21-11-16)



ஜீவரட்ணம் ஆச்சாரியார் குடும்பத்தினர்.
(ஆறுமுகம் சிற்பாலயம்)
"ஜெய மஹால்" அம்மன் வீதி,
திருநெல்வேலி கிழக்கு
யாழ்ப்பாணம்.

(இருவீட்டார் அழைப்பு)



## யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்
சங்கப் பொதுச்சபை அங்கத்தவர்களின்
வருடாந்தப் பொதுக்கூட்டமும்
### 2003ஆம் ஆண்டுக்கான நிர்வாக சபைத் தெரிவும் (31-08-2003)

மேற்படி சங்கத்தின் பிற்போடப்பட்ட வருடாந்த பொதுக்கூட்டமும் நிர்வாகசபைத் தெரிவும் 31-08-2003 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு சங்கத் தலைவர் திரு.சி.சுந்தரலிங்கம் அவர்களின் தலைமையில் சங்கத் தலைமைச் செயலகத்தில் (559,-நாவலர் வீதி, யாழ்ப்பாணம்) நடைபெறவிருக்கின்றது என்பதை அங்கத்தவர்கள் அனைவருக்கும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

சி.சுந்தரலிங்கம்
மாவட்டத் தலைவர்

கு.காந்தரட்ணம்
மாவட்டச் செயலாளர்

(C/29824) (19-11-16)



## 11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 1970 - 06 - 30

உதிர்வு 1992 - 08 - 29

**அமரர் பாக்கியதுரை உதயகுமார் (உதயன்)**

ஆண்டுகள் அகன்றாலும்
அகலாத நினைவுகளாய்
உன் ஞாபகங்கள் எம்முள்
அலை மோதுதடா!
இல் வாழ்வில் இணைந்திட்ட - உன்
உடன் பிறப்பெல்லாம்
நீயும் இருந்திருந்தால்.... என,
கண்களை நிறைக்கின்றோம் - இல்லை
அங்கே நீயும் உன் காதலியுடன்
கலந்திருப்பாய் என கண்ணீர் துடைக்கின்றோம்.
ஆண்டுகள்தான் அகலும் - அகலாது
உன் ஞாபகங்கள் எம் நெஞ்சைப் பிழிந்திட
நித்தம் நித்தம் தவிக்கின்றோம்
சதிதான் உனக்கு விதியாய் என
சாமியிடம் கேட்கின்றோம்.
சத்தியம் வெல்லுமென சாந்தி கொள்கிறோம்.

உன் பிரிவால் துயருறும்,
- உன் குடும்பத்தினர்.

மானிப்பாய். (21941) (32-11-16)



CONYBIO FIR CONYBIO FIR CONYBIO FIR

## தலைவலியா ? CONYBIO FIR



### HEAD BAND



1500/-

- நெற்றிப் பகுதியின் குருதிச் சுற்றோட்டத்தை அதிகரிக்கின்றது
- முகம் களைப்படைவதை தடுக்கின்றது
- தலைவலி, ஒற்றைத் தலைவலியை குணமடையச் செய்கின்றது

### BIO CHITOSAN BELT



8500/-

- முதுகுவலிக்கு நிவாரணி
- இடுப்பைச் சுற்றிய பலவீனமான பகுதிகளுக்கு புத்துணர்வளிக்கின்றது
- ஆண்மை சக்திக்கு வலுவூட்டும்
- நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்துகின்றது

### ELBOW, ANKLE & KNEE BRACE



1620/-

- பாதம், முழங்கை தசைப் பகுதிகளை மிருதுவாக்கி இதமூட்டுகிறது.
- மூட்டுவலிகளுக்கும் தசைப் பிடிப்புக்கும், வேதனை குறைப்பிற்கும் உன்னதமானது



1800/- 1800/-

### SOCKS



460/-

- பக்டீரியா கிருமிகளையும் துர் நாற்றத்தினையும் ஒழிக்கிறது.
- பாதிப்படைந்த உடற் பாகங்களை பாதுகாத்து வலுவடையச் செய்கிறது
- வாத நோய்களை போக்கும்
- பாதத்தின் அடிப்பகுதியை மிருதுவாக்கி உணர்ச்சியற்ற பாதங்களுக்கு புத்துணர்ச்சி அளிக்கின்றது.

### T-SHIRTS

இதயம், நுரையீரல், ஈரல், சமிபாட்டு நீர்சுரப்பி, வயிறு, சிறுநீரகம் (Kidneys), முதுகு பகுதிகளில் ஏற்படும் நோய்களுக்கு சிறந்த நிவாரணி.



2000/-

### PILLOW PAD



2200/-

- மூளைப்பகுதியின் இரத்தச் சுற்றோட்டத்தை சீராக்குகின்றது
- தூக்கமின்மையை குறைக்கின்றது
- களைப்படைதலை குறைக்கின்றது

மற்றும்

WOMEN'S BRIEF 1100/-
MEN'S BRIEF 1100/-
BRASSIERE 1415/-

**Conybio Health Care Products (Private) Ltd.**
271, Sea Street, Colombo 11. Tel : 01-2434800, 01-2435732

யாழ் நகரில் பெற்றுக்கொள்ள
துர்க்கா மெடி கிளினிக் - மானிப்பாய், யாழ்ப்பாணம்
பொப்புலர் மோட்டர் ஸ்டோர்ஸ் - ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்
சம்பந்தர் மெடி கிளினிக் - ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
சிட்டி மெடிக்கல்ஸ் - ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
சென்றல் நர்சிங் ஹோம் - திருநெல்வேலி
ஓல்ட் பார்க் சைனிஸ் ரெஸ்டோரன்ட் - கண்டி வீதி, யாழ்ப்பாணம்

CONYBIO FIR CONYBIO FIR CONYBIO FIR



உ
சுழிபுரம் - பறாளாய்
## ஈசுர விநாயகரின் பாற்காவடித் தினம் (31-08-2003)

ஆளில்லாத காரணத்தால் நானே வருகின்றேன் என்று கூறியருளிக் கொண்டு மக்களை நோக்கி வந்தீரே ....... இந்நிலையை மக்கள் உணர்ந்த பின்னரும் இன்னும் தாமதம் ஏனோ?

விரைவாகத் தீர்த்துத்தர பாற்காவடிகள் பலன் அளிக்கட்டும்.

சோழியூரான் - பிறைகுடிக்குரு

(21967) (25-21-11-16)